தமிழ்க்கவி மாலை:—மலர்-௯.

கல்குளம்-குப்புசாமிமுதலியார்

பதிப்பித்தது.

ஒருதுறைக்கோவை

உ

சிவமயம்.

அமிர்தகவிராயரியற்றிய

நாணிக்கண்புதைத்தல்

என்னும்

ஒருதுறைக்கோவை.

இது

வித்வான்

காஞ்சீபுரம் - இராமசாமிநாயுடு அவர்களாலும்

கல்குளம்-குப்புசாமிமுதலியாரவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

விலை அணு 4.

பொருளடக்கம்.

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய அமிர்தகவிராயரென்பவர், மதுரைஜில்லா, சிவகங்கை தாலுக்காவிலுள்ள பொன்னுங்கால் என்னும் கிராமத்திற் பிறந்தவர். இவர் தோன்றியகாலம் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலமெனத் தெரிய வருகிறது. கி. பி. 1635-1645–வருஷம்வரை அரசாண்ட தளவாய் சேதுபதியின் சகோதரியாகிய கங்கை நாச்சியார்க்குப் புத்திரராயுதித்து தன் அம்மானாகிய தளவாய் சேதுபதி தனக்குத்தந்த இராமநாதபுரத்தைக் கைக்கொண்டு முடிசூட்டப் பெற்று அதற்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள அநேக சிறு நாடுகளைத் தன்வயமாக்கி எங்கும்புகழ்பெற்று கி-பி 1645-ம் வருஷமுதல் 1670-ம் வருஷம்வரையில் அரசாண்ட தளவாய் ரகுநாதசேதுபதியின் சமஸ்தான வித்வான்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அச்சேதுபதியின் வாயில் வித்வான்கள் பலருள்ளும் இவர் அதிக சிரேஷ்டமாக எண்ணப்பட்டவர். அதற்குக்காரணம் என்னையெனின்:—அரசனும் ஆஸ்தான வித்துவான்களும் ஒருநாள் மாலைப்பொழுது உய்யானவனத்திலிருந்தபோது அரசன்பாவலர்களைமனோரம்மியமான பற்பல பாடல்களைச் சொல்லச் சொல்லிக் காலங் கழித்துக் கொண்டிருக்கையில், அகப்பொருளைப்பற்றி வார்த்தை நிகழ்ந்தகாலத்து அரசன் தன்னெதிரிலிருந்த புலவர்களை நோக்கி, அகப்பொருட்டுறையுள் ஏதேனு மொன்றில் பல பாடல்செய்ய வல்லீரோ என்று கேட்க, அவருள் சிலர் ஒரு துறையிலே பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, பாடல் செய்வோம் என்றார்கள். அமிர்தகவிராயரோ "நான் நூறு பாடல் செய்வேன்" என்றார். அவர்கள் இவர்சொன்னதை வேறுவிதமாகச் சீரறுத்து 'நானூறு பாடல் செய்வேன்' என்று சொன்னதாகத் தர்க்கிக்கவே இவர் "இதற்கென்ன இவ்வளவு போராட்டம்; நானூறும் செய்வேன், அதையும் ஒருபக்கத்தில் எழுதி முடிப்பேன்" என்றார்.

இவ்வாறுசெய்வது அருமையென அறிந்த அனைவரும் இவர் எப்படிச் செய்யப்போகிறார் என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், இவர் குறித்த தவணைக்குள், 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறையில் நானூறு கட்டளைக்கலித்துறைசெய்து முடித்து முதலிரண்டடியில் தன்னரசனுடைய பிரபாவங்களைக்கூறிப்பின்னிரண்டடியில்அகப்பொருளொன்றும் புறப்பொருளொன்றுமாக இரண்டு பொருள் தோன்றும்படி செய்தனர்.

இந்நூலை அரங்கேற்றிய காலத்து அரசனும் அழுக்காறுகொண்ட வாயில் வித்வான்களும் இக்கோவையின் பெருமையையும் அகப்பொருளினிமையையும், புறப்பொருளின் நயத்தையுங்கண்டு மிக வியந்தனர். அரசன் அவர்மீது பிறந்த அன்பின் அறிகுறியாக அவர்பிறந்த ஊராகிய பொன்னுங்கால் *என்னும் ஊரையே அவரும் அவர் சந்ததியாரும் சந்திராதித்தருள்ளவரை அனுபவிக்கும்படி மானியமாக விட்டுவிட்டான்.

இவர்செய்த கோவையிலுள்ள பல செய்யுட்களினும் பொதிந்துள்ளபொருள் இனிமைபயக்குமென்பது அறிந்தோர் அனைவர்க்கும் தெரிந்ததேயாயினும், மற்றவரும் இக்கோவையைக் கற்றுணர்ந்து ஆனந்திக்கும்பொருட்டு இரண்டொரு செய்யுட்களை உதாரணமாக எண்டெடுத்துக் காட்டுவாம்.

மஞ்சாங் கருதலர் போர்ப் படைமேற் சண்ட மாருதம்போல்
விஞ்சாங்க மூலபல ரகுநாதன் வியன் சிலம்பிற்
பஞ்சாங்க மோதி மறைகாட்டிச் சொர்க்க மிப்பாற்படுத்தி
யஞ்சாங் குலத்தவர் பார்ப்பாரைச்சேர்ந்த ததிசயமே.

கடைமுன்னர் நின்று முடிமேற் றமதிருகை குவித்துப்
படைமன்னர் போற்றும் ரகுநாத சேதுபதி வரைவா

---

* One of the Inam villages in the Sivaganga Taluk. Page 69. Village statistics, Madura District, Census of India, 1901.

யிடைதான் குறைந்தது மச்சமுங் காட்டுவ தில்லை யென்றால் மடவீருமது தனத்தை யெவ்வாறு மதிப்பதுவே.

இன்னுஞ் சில்துறைகளில் தலைவன், நாணமுற்று கண் மூடி நின்ற தலைவியை நோக்கி, 'கண்மூடி யோகியர்போல நின்றீர் இக்கருத்தினுக்கு விண்மூடியவரை கைவிடில் ஏதம் விளைவிக்குமே' என்றும், 'காவியங்கை புனைந்தீர் விடுத்தீர் தனம் கஞ்சமலர்த்தேவியும் போல நின்றீர், விருப்பேதுங் கள் சிந்தனைக்கே' என்றும், 'சேலுங் கமலமும் காவியு மாவுந் தெவ்வேந்தைவென்ற வேலும் பொருவும் விழியை யென்நாட்கண்டு மேவுவனே' என்றும் 'பதிசேரிளமுலை சங் கிலிகாட்டும் பணியணிந்தாய், துதிசேர்பரவையுங் காட்டில் என்போலில்லை சுந்தரனே' என்றும், 'வெங்காம வெய்ய விடாய்க் கிளநீர்தந்து வெவ்விடத்தை யங்காம வல்லி நல் லீர் மறைத்தீர் நன்றறிவுமக்கே' என்றும் 'பந்தாடல் கண் டனமம்மானை யாடலு பார்க்கவரந் தந்தாடல் செய்யில் உனக்கெய்துங்காண் வெகு தன்மங்களே' என்றும் 'கானத் தை வானத்தை நேர் சொலிடை யொருகன்னியத்தம் மீன த்தை நாடிச் செலக் கும்பராசி வெளிப்பட்டதே' என்றும், 'பருப்பதமீது மலருஞ் செங்காந்தள் பரவையிற் பூத்திருப் பது அதிசயங்காண்' என்றும், 'கோவூர் முன்காட்டியபின் குன்றத்தூர் வழிகூட்டியப்பா லூர்நுங் காஞ்சிபுரங் காட் டுத ரெண்டை நாட்டியல்பே' என்றும், 'பண்கட்டு மென் மொழியீர் நீர் மிகவும் பலரறியக் கண்கட்டுவித்தையும் செப் பிடுவித்தையுங் கற்றவரே' என்றும், 'இவ்வுலகியற்கை காவி யங்கற்றவர்க்கே யத்தமாகுங் கடபடமே' என்றும், கொடி யொடு முரசுங்கணையுஞ் சிலையுங் கொடாமலணி முடி.மாத்தி ரம் மதவேளுக்களித்தன் முறையல்லவே' யென்றும், 'வெந் தாகப் பசிதணிக்கக் கண்டிறவாம லிளநீர் கொடுத்தென் கவை யில்லையே' என்றும், 'சக்கிலியாயினர் பாப்பாருங்

கைகொள்ளச் சம்பந்தத்தால் அக்கிரமமென்று குயவரிதை வெளியாக்கினரே' என்றும், 'உத்தமராயினர் சாணார் சண்டாளருயர் மகுடவர்த்தனர் தாழ்ந்தனர் பாருங் கலியுகவஞ் சனேயே' என்றும், 'தினநற்கரும் பைத்தராமற் புழுகிலகு பன்னுடை மூடுகுரும்பைதந்தா யென்னபாக்கியமே' என்றும், இவ்வாறு பற்பலவாறு வுரைத்த உரையின் சொன்னயமும் பொருணயமுங் கண்டும் நூலினை முற்ற நோக்கக் கருதாம லிருப்பவர்கள் யாவர் ?

இவர்காலத்து,சோழநாட்டிலும்தொண்டைநாட்டிலும் விளக்கமுற்றிருந்த புலவர்களுட் சிறந்தோர்முறையே இலக்கண விளக்கஞ்செய்த வைத்தியநாதநாவலரும், கழுக்குன்றப்புராணம்செய்தஅந்தகக்கவி வீரராகவமுதலியாருமாம்.*

இவர் இரகுநாத சேதுபதி காலத்திருந்தவர் என்பதைக்கொண்டு, இவர் இருந்தது கி. பி. 1640 வருஷத்திற்கு முன்னும் பின்னும் என்று நிச்சயிக்கப்படலாமோ? இப்பெயரைக்கொண்ட சேதுபதிகள் பலர் இருந்திருக்கிறார்களே ? எனின், இப்பெயரைக் கொண்டோர் பலர் இருந்திருப்பினும், இக்கோவை, 1, 13, 21, துறைகளிலும் மற்றைப் பாக்களிலும் கோவைபெற்றவன் தளவாய் ரகுநாத சேதுபதி என்றிருத்தலாலும், 1645–1670 வருஷம் வரையில் ஆண்டவன் அப்பெயர்கொண்டவன் தான் என்று நிருணயிக்கப் போதிய சான்றுளதாலும் † மேலும் இச்சேதுபதி கைக்கொண்ட ஊர்ப்பெயரும் நாட்டுப்பெயரும் துறைகளின் முன்னிரண்டடிகளில் குறிக்கப்பட்டிருப்பதாலும், அமிர்தகவிராயர் பதினேழாவது முதலிடைக் காலங்களிலிருந்தனர் என்று ஒருதலையாக்கொள்ள லியலும்.

கல்தளம் - தப்புசாமி முதலியார்.

* See P. 4. Preface to the Edition of இலக்கண விளக்கம்.
† Robert Sewell's South Indian Dynasties, pp 87-92.

இரகுநாதசேதுபதி

ஒருதுறைக்கோவை.

நாணிக்கண்புதைத்தல்.

பூமேவுதெய்வத்தளிர்முகைபூத்தபொற்கோலவல்லி
நாமேவுகல்விப்புயறளவாய்ரகுநாதனிசைப்
பாமேவுகந்தகிரிமணிச்சாரற்பளிக்கறைசூழ்
காமேவுமற்புதநம்பாலகத்துக்களிதருமே. (௧)

ஞாலங்கைக்கொண்டவிராமேசர்தாண்முடிசூடியெழு
ஞாலங்கைக்கொண்டரகுநாயகன்செம்பிநாடனையீர்
சேலங்கைக்கொண்டுயர்வல்லமென்பாலருள்செய்தனல்ல
காலங்கைக்கொண்டரசாள்வதுபார்த்திருங்கண்களித்தே.

ஆயுந்தமிழினும்போரினும்பாரிலகத்திபனுஞ்
சேயும்புகழ்தளவாய்ரகுநாதன்சிலம்பில்வள்ளை
பாயுங்கயலிந்தநேமிகண்டாலெனப்பார்த்திடினன்
றோயுந்தடமென்னவேயணங்கேயுனைச்சொல்லுவனே. (௨)

தேனார்மணமுல்லைவெண்டாரும்பைந்தமிழ்ச்செந்தொடை
தானார்தடம்புயத்தான்ரகுநாதன்றமிழ்ச்சிலம்பில் [யுந்
வானாரிளம்பிறைவாணுதலீர்தும்பிவாழுமுங்கள்
கானார்குறிஞ்சியிற்செல்கின்றதாரையைக்காட்டிடுமே. (௩)

பண்டேந்தியசங்கினம்போலமல்லிகைப்பாரமுகைச்
செண்டேந்தியகரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பில்
வண்டேந்தியசெங்கைவாழ்வேயென்னெஞ்சமறுகுமதங்
கொண்டேந்தியவெங்கரிக்கோடுதோயுங்குருதிகண்டே. ()

வானைச்சுரபியைச்சிந்தாமணியைமந்தாரமென்னுங்
கானைப்பொருகொடையான்ரகுநாயகன்கந்தகிரிச்
சோனைப்புதுமதுவார்குழலீரித்துதிக்கைவெம்போ
ரானைக்கிசையிலலங்காரமானுக்கழகல்லவே. (௬)

போரேறுவெங்கணரக்கன்முன்மாதலிபூட்டியபொற்
றேரேறுசிங்கம்ரகுநாதன்றேவைச்சிலம்பில்வெய்ய
காரேறுவன்கண்மைசேர்கையுற்றுபொருகாளைபின்சேர்
வாரேறுகொங்கையைநீதடுத்தாயிலைவன்புறவே. (௭)

மைம்மானிகர்த்தமலைவளர்காதலிமாதுவளர்
பெம்மானருட்குரியோன்ரகுநாதன்பிறங்கலன்னீர்
கைம்மான்குதிக்கறியாதென்றுநீரென்கலைமதிக்கு
ளிம்மான்குதிக்குமென்றோபிடித்தீர்கையிரண்டினுமே. (௮)

ஆரத்தொடையிடைநீலமிட்டாங்களிதோயுமுல்லை
வீரத்தொடைபுனைவோன்ரகுநாயகன்வெற்பனையீர்
மாரத்தொடைக்குண்முகைத்தாமரைவிட்டுவன்கொலைசூழ்
கோரத்தொடையெனவோபுதைத்தீர்மைக்குவலயமே. (௯)

நடைநிலஞ்சாதிகுலமோடறிவங்கநல்கைந்திப்
படையணிசேர்முன்றிலான்ரகுநாதன்பனிவரைவாய்க்
குடையலர்காந்தளம்பூம்போதுகன்னைக்குறிஞ்சியெங்கோ
னுடையதன்போதென்னவோவிழியூடுகொண்டொத்தியதே.

இயலைத்தலைபெற்றமுத்தமிழ்வாணர்க்கெழுமடங்கு
புயலைப்பொருவுகையான்ரகுநாதன்பொருப்பனையீர்
முயலைத்தவிர்த்தமதியுடலாவியமுரிவரிக்
கயலைப்பிடிப்பதென்னோகுறையாதர்களிழிகழ்ந்தே. (கக)

வரைசேர்மருமத்திருவஞ்சியாடமணியுஞ்சலாம்
விரைசேர்தளவத்தொடைரகுநாயகன்வெற்பிலின்ப
வுரைசேர்கமனியப்பாவாய்செந்தேனங்கையூடுறமின்
னிரைசேரமிர்தகடத்தையென்னோவிட்டுநிற்கின்றதே. (கஉ)

பாகந்தருமிசைவல்லோர்க்குமான்மதம்பாய்தருகை
மேகந்தருதளவாய்ரகுநாயகன்வெற்பிலிந்திர
போகந்தருகளியானையிலேறுமென்புந்தியின்ப
மோகந்தருகிளியேதிட்டிசேர்தன்முறையல்லவே. (சங)

நாகஞ்செறிமலர்ப்பூங்காவும்பொய்கையுநான்மறையும்
நாகஞ்செறிதமிழத்தேவையர்கோன்ரகுநாதன்வெற்பில்
நாகஞ்செறிகின்றதென்மதிசாயநற்பார்வைதன்னை
நாகஞ்செறிவஞ்சியாய்மறைத்தாயதுநன்றலவே. (கச)

மாவானசூரனிருப்பையெல்லாமத்திவாய்க்குதவுந்
தேவானவனைப்பணிரகுநாதன்சிலம்பிலென்மேற்
காவானபைங்குழலீர்படிறோமென்றுகைகளினாற்
பூவானதுந்தடுத்தீர்விடுத்தீர்பொற்பொருப்பினையே. (கரு)

தார்கொண்டபாடலம்பேரோடையாம்பறருங்கமலச்
சீர்கொண்டசெங்கரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பி
லேர்கொண்டநீலமடலேறுகைபெரிதீனமன்றோ
வார்கொண்டகொம்மைப்புளகப்படாமுலைவஞ்சியர்க்கே. ()

தன்னம்புயத்திற்குவலயந்தார்முல்லைதாங்கிமன்னர்
சின்னம்பறித்தரகுநாதன்றேவைச்சிலம்பிலின்று [கண்டாற்
பொன்னங்குடத்தையெதிர்கண்டவென்னமைப்போதுங்
கன்னங்கறுத்தகுழலாய்நற்காரியங்கைப்பலனே. (௧௭)

செந்தாதும்பூவுஞ்சுருதிவண்டார்ப்பத்தினம்பொழியு
மந்தாரமன்னகையான்ரகுநாதன்மழவையன்னீர்
நந்தாமணம்பெறவந்தேனுக்கின்றுநறியமல
ரந்தாமரைபொளித்தீரளித்தீர்சிற்றரும்பினையே. (௧௮)

பாரேழ்கழனியும்வாடாதுதன்மப்பயிர்விளைக்குங்
காரேயனையரகுநாதன்றேவைக்கனங்குழையீர்
நீரேபொறிவெம்படநாகங்கைவிட்டுநின்றுவெய்ய
சூரேபுரிநஞ்சமெவ்வாறுகையிற்றொடுகின்றதே. (௧௯)

யாழுங்குழலும்பசுந்தேனும்பாகுமிசைந்துகுடி
வாழுந்திருமொழியாய்ரகுநாதன்மணவைவண்டு
சூழுங்களபமுலையானைமுன்னித்துயர்க்கடல்வாய்
வீழுங்கொடுமையெல்லாங்கண்டிலார்செங்கைவேலவரே. ()

நீலக்கரும்புயற்றாகணம்வெண்ணிலாவணிந்து
ஞாலத்துவந்தமின்னேதளவாய்ரகுநாதன்வரைக்
கோலத்தினைக்குளினமென்றுமானினங்கூடுமென்றே
சாலப்புதைத்துநின்றாய்செங்கண்வேழந்தருங்கொங்கையே.

சேயென்றுவந்ததளவாய்க்குநாவலந்தீவிற்குமோர்
தாயென்றுவந்தரகுநாதன்றேவைத்தமிழ்வரைமேற்
காவென்றுவில்வக்கனியளித்தீரென்கலைமதிக்கு
வாவென்றுசற்றுமலராதுபாணிக்குண்மைம்மலரே. (௨௨)

கோட்டந்தவிர்த்தகுடைமன்னர்கேசரிகூட்டமன்ன
ராட்டந்தவிர்த்தரகுநாதன்வெற்பிலென்னுருயிர்க்கு
வாட்டந்தவிர்த்தவரிவிழியாளைமறைத்தருளி
னீட்டந்தவிர்ப்பதென்னோதுன்றவாணரிளங்கொடியே. (உ௩)

ககராசவீரவெங்கேதனத்தான்கந்தமாதனப்பொன்
னகராசன்வீரைக்கிறைதளவாய்ரகுநாதன்வரைச்
சிகராசலத்தின்மலராதநீதிதெளிந்துகொண்டோ
மகராலயத்தின்மலரவைத்தீர்செம்மலர்க்கஞ்சமே. (உ௪)

கம்பக்கருணையந்தேனூறுஞானக்கனியருள்சே
ரும்பர்க்கரசனையான்ரகுநாதனுயர்வரைவாய்
விம்பக்கனியிதழீர்மணிமார்பில்வெங்கோடுடைய
கும்பக்கரிகொடிதாம்விலக்கீர்மதகுஞ்சரமே. (உ௫)

தொடைபெற்றகொண்டல்பிறையிளநீர்சுமந்தோதிமத்தி
னடைபெற்றகன்னிக்கரும்பனையாய்ரகுநாயகன்வேற்
படைபெற்றசெங்கையும்வேழமுமாய்நிற்றல்பார்த்துமதிக்
குடைபெற்றவெய்யவனெய்யவன்போர்க்குறிகொண்டன

ஓதங்குழல்கஞ்சம்வீணைதடாரிகிளந்தபஞ்ச [னே.
நாதஞ்சிலம்பியதேவையர்கோன்ரகுநாதன்வரைக்
காதங்கமழ்குழலீரெனதாவிகலக்கில்வந்
மேதம்பெஃதென்னவோமறைத்தீரின்றிணைக்கயலே. (உ௭)

பண்மூடியசெங்கனியிதழீரெழுபாரகந்தன்
னுண்மூடியபுகழான்ரகுநாதனுயர்வரைவாய்க்
கண்மூடியோகியர்போலநின்றீர்க்கருத்தினுக்கு
விண்மூடியவரைகைவிடிலேதம்விளைவிக்குமே. (உ௮)

மேகந்தருமணிவெண்முத்தராசியின்மென்மலர்ப்புன்
ஞகந்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வெற்பி
லேகந்தருபதின்மூன்றென்பதான்மறைத்திங்குநின்றி
ராகந்தருமைந்துமொன்பதுமேவெளியாகியதே. (உகூ)

பாவாய்மிறைகின்றசெம்பொருளோடுநற்பைம்பொருளு
நாவாய்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வரைப்
பூவாய்மனுமுறைபாலெமைவாழப்புரக்குமிளங்
கோவாயவரையிறைமறைத்தாலதுகொள்கையன்றே. (௩௦)

வில்லிளங்காளைமயில்காப்பமானைவெகுண்டெழுந்த
நல்லிளங்கேசரிதேவையர்கோன்ரகுநாதன்வரை
வல்லிளங்கோலமணிமுலைசாலவருத்தும்வண்டு
புல்லிளங்காமர்விரிந்தசெங்காந்தட்புதுமலரே. (௩க)

கல்லொன்றிரண்டிளநீர்தாங்கிமுன்வரக்கண்டுமுனி
சொல்லென்றுநின்றரகுநாதன்றேவைச்சுரும்பின்மணி
வில்லொன்றுவாணுதலீர்செப்பினூடத்தமேவுமல்லா
லல்லொன்றுநீலக்கடலூடுசேர்ப்பதறிவின்மையே. (௩உ)

பண்ணார்குதலைக்கனிவாய்சிவந்தபசுங்கிளியீர்
நண்ணார்சமரிற்புலிதளவாய்ரகுநாதன்வரைக்
கண்ணாரிணைக்கயன்மங்கலமாமெனக்கைக்கொண்டநீர்
தண்ணார்தரளமணிக்கும்பநீக்குதறக்கதன்றே. (௩௩)

சந்தேறியதடஞ்சாரலிலாயிரந்தண்மதிபோ
னந்தேறியகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைக்
கொந்தேறியமலர்வாள்புனைந்தீர்மதகுஞ்சரந்தேன்
வந்தேறியமொழியீர்புனைவீர்செங்கைமாமலரே. (௩௪)

கார்பூத்தபுன்னைவெள்ளோதிமஞ்சிதரன்கைவளைபோ
லேர்பூத்ததேவையர்கோன்ரகுநாயகனேமவெற்பில்
வார்பூத்தபூண்முலையீரறிந்தாய்ந்துமணப்பதற்கோ
தார்பூத்தசெங்கையிலேந்திநின்றீரின்பசாகரமே. (நடு)

பால்வாய்ப்பசுந்தமிழ்வீசியவாசம்பரந்தவைகைக்
கால்வாய்த்தவீரையர்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பின்
மேல்வாய்த்திருந்தவெழுத்தாறரிதின்விளங்குமென்றோ
நூல்வாய்த்தநுண்ணிடையீர்மறைத்தீரணிநோக்கினையே. ()

ஆவியும்பூவுந்தகரமுந்தேனுமணிந்துநறு
நாவியுஞ்சேர்குழலீர்தளவாய்ரகுநாதன்வரைக்
காவியங்கைபுனைந்தீர்விடுத்தீர்தனங்கஞ்சமலர்த்
தேவியும்போலநின்றீர்விருப்பேதுங்கள்சிந்தனைக்கே. (நஎ)

வாவிக்குளொற்றைவனசமென்றோதுமைவானிலங்கும்
காவிச்செழுங்குடையான்ரகுநாயகன்காவிரிநாட்
டாவிக்குயிர்தந்தகோட்டேர்கொழுதனமப்படிநீர்
சேவிக்கநல்குங்கமலாலயமுத்திசித்திக்கவே. (நஅ)

சங்கேகொடைத்தருவேயெனவாழ்வுதருங்கருட
வெங்கேதனத்தளவாய்ரகுநாயகன்வீரைசுற்றும்
பங்கேருகத்தனமேயொளிசேர்தனபாரமலே
யிங்கேயிருக்கக்கடலேறினரென்னிறையவரே. (நகூ)

கன்னித்திரைச்சங்குமிப்பியுமீனுங்கராவுமொளிர்
நன்னித்திலஞ்சொரிதேவையர்கோன்ரகுநாதன்வெற்பின்
மின்னிற்சிறந்தமின்னேசுரிக்கோட்டுவெண்முத்திருக்க
மன்னித்திகழ்கஞ்சமுத்தமென்னேனைகவளைகின்றதே. (சo)

போரயினகம்புலிசிலைவாள்வெம்பொறிவழங்கு
மாரெயில்வீரையர்கோன்ரகுநாதனணிவரைக்கு
ணீரரணுகியமைவேலைகைக்கொண்டநேரிழையீர்
பேரரணனகிரிதுர்க்கநீக்குதல்பெண்புத்தியே. (சக)

திரையோங்குபாற்கடற்பூந்தாமரைச்செழுந்தேனிருக்கும்
வரையோங்குமார்பன்ரகுநாதன்றேவைமணிவரைமேல்
விரையோங்குபங்கயந்தாங்கியநீரிருவெற்பொளித்தா
லுரையோங்குவிண்மணியெண்மணிநீரென்றுரைசெய்வரே.

மதிசேரமுதவிதழியஞ்சிதளவாசவைகை
நதிசேர்தெளிபுனல்வீரையர்கோன்ரகுநாதன்வரைப்
பதிசேரிளமுலைசங்கிலிகாட்டும்பணியணிந்தாய்
துதிசேர்பரவையுங்காட்டிலென்போலில்லைசுந்தரனே. (சஙு)

முள்ளார்வெங்கானந்திரைவரைவானமுகடுசென்று
நள்ளார்புகவெஞ்சிலைகுனித்தோன்ரகுநாதன்வரைக்
கள்ளார்கருங்குழலீர்கொடுங்கூற்றையுங்கையமைத்தீர்
புள்ளார்தமைவிலக்கிரைமைவாழப்புரக்கிலின்றே. (சச)

போற்றுங்கமடம்பணிகுலநாகம்பொறுத்தசுமை
யாற்றும்புபவரையான்ரகுநாதனணிவரையிர்
தோற்றுங்கயலைமறைத்தீர்பொற்கஞ்சமுந்தோற்றுவித்தீர்
சாற்றும்பொழுதினினீரோமதுரைத்தடம்பொய்கையே. ()

நறைபெற்றமாலைக்கதிர்வேலுமாலுமெந்நாளுஞ்செவ்வி
யுறைபெற்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளமென்னுங்
குறைபெற்றதாருவைமைந்நீலவண்டுகுடைந்ததிரா
திறைபெற்றபோதகைத்தீர்வந்துசாய்க்குமிபக்குன்றமே. ()

ஆடகமாமதில்விரையர்கோன்வண்டலம்புமுல்லை
யேடலர்மாலிகையான்ரகுநாயகனேமவெற்பிற்
சூடகமேவுகைக்கொண்டீர்குவலயந்தோகையன்னீர்
கூடலைவேண்டிவந்தேனளித்திர்பரங்குன்றினையே. (௪எ)

கங்கமுஞ்சீனமுஞ்சோனகநாடுங்கலிங்கமும்போர்
வங்கமுஞ்சேர்முன்றிலான்ரகுநாதன்பணவைவரைச்
சிங்கமுஞ்சாயவருகரிப்போரிலென்சிற்றுயிரு
மங்கமுந்தெய்வதுபார்த்திரங்காததென்னரணங்கே. (௪அ)

நூலுந்துடியுங்கொடிமின்னுநாகமுநுண்மதியும்
போலுந்தளரிடையாய்ரகுநாதன்புனற்கரந்தைச்
சேலுங்கமலமுங்காவியுமாவுந்தெவ்வேந்தைவென்ற
வேலும்பொருவும்விழியையென்நாட்கண்டுமேவுவனே.

மல்குங்கிரணமணிசெம்பொன்வாரிமருங்கிருபா
னல்குந்திரைவைகைநாடனெங்கோன்ரகுநாதன்முறைப்
புல்கும்பதியில்விசும்பிடைநீண்டுபுகுதருமீ [ேதே.
னெல்குந்துடியிடைதோற்றுதென்றேவின்றெளிக்கின்ற

மகக்கண்ணிற்சிலமறையோரைவாழ்வித்துவான்கொண்டு
சகக்கண்ணிற்சேர்த்தரகுநாதன்றேவைச்சயிலமன்னீர் [து
முகக்கண்ணிற்காண்டலரிதென்பதோவிழிமூடியன்பா
லகக்கண்ணிற்காணப்பதிநோக்கினீர்நன்றறிவுமக்கே. (௫௧)

மலைவேலிவையம்புரந்தசெங்கோன்மனுராசன்மனுக்
கலைநூறெரிந்தவெங்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பிற்
றலையாதிருந்தெம்மனத்தூடுதோன்றுந்துயர்தொலைக்கக்
கொலைவேலிருந்தகையாற்குறிப்பீர்மணிக்கொம்பினையே. ()

தேசிகப்போதணிசண்பகக்காடுதிருந்திழையார்
நாசியொப்பாமலர்வீரையர்கோன்ரகுநாதன்வரைப் [நற்
பாசிழைப்பூவைமுகைக்கோங்கில்வேடன்கைப்பாணமுற்
காசினிப்பானுனைப்பாலையென்பார்கலைகற்றவரே. (௫௩)

முகைகாட்டியமுன்றின்முல்லைநல்லார்தம்முகமதிவெண்
ணகைகாட்டியபுகலூர்த்தளவாய்ரகுநாதன்வரைத்
தகைகாட்டியசெவ்விளநீரிலம்புயஞ்சாரிலகிற்
புகைகாட்டியகுழலுன்போகிநீயும்புனலுலகே. (௫௪)

ஆடியதோகையன்னார்முகம்போன்மதியம்பொனெயில்
சூடியகானப்பதிரகுநாதன்சுரும்பில்வள
நீடியபெண்ணைக்குறும்பைகண்டேன்மலர்நெய்தல்கண்டால்
வாடியசிற்றிடையிருமைப்போலுமணலுலகே. (௫௫)

கொத்தார்குழலியர்கண்டமொப்பாவெழில்கொண்டமுத்தி
னத்தார்கரந்தைரகுநாயகன்செம்பிநாட்டுவரை
முத்தார்மருப்பிற்கருவிளங்காணின்முளரிமல
ரொத்தார்மதிமுகத்தீருமைக்கார்வெற்புலகென்பரே. (௫௬)

தொடைகாட்டும்பூங்குழலார்நடைபோலிளந்தூவியன்ன
நடைகாட்டும்வைகையம்பூந்துறைபான்ரகுநாதன்வெற்பி
லிடைகாட்டுநூல்வெற்பிளமுலைகாட்டுமிளங்கொடியீர்
படைகாட்டுமைவிழிகண்டுரைப்பேனிப்படியென்னவே. ()

பூவளர்வாவிக்கமலமும்வீதியும்பொன்மனையு
மாவளர்தேவைப்பதிரகுநாதன்மணிவரைமேற்
கோவளர்தானத்தினங்கன்றுசேர்கைகுறித்தமைத்திர்
காவளர்பூவைக்கரசுமைப்போலெவர்காசினிக்கே. (௫௮)

அறங்காவல்கொண்டமனுமுறைபாலணிநாவசைந்து
கறங்காமணிமுன்றிலான்ரகுநாதன்கரந்தைபன்னீ
ருறங்காதவெங்கண்மதகரிபாரநெஞ்சூடுருவிப்
புறங்காணிலார்பொருப்பார்பிணைபாயப்பொருக்கினுமே. ()

நங்காமமேதனுவெனவந்தகார்செம்பிநாடனுயர்
செங்காவியங்குடையான்ரகுநாதன்சிலம்பின்மிக்க
வெங்காமவெய்யவிடாய்க்கிளநீர்தந்துவெவ்விடத்தை
யங்காமவல்லிநல்லீர்மறைத்தீர்நன்றறிவுமக்கே. (௯0)

நிலையேந்துமாளிகைமாதர்கணெஞ்சயதிக்
கலையேந்துந்தேவைரகுநாதன்வெற்பில்வெங்கள்ளைவரிச்
சிலையேந்தும்வாணுதலீரங்கையேந்துஞ்செயலிதென்னே
விலையேந்துமாணிக்கவள்ளமிங்கேவைத்துமெய்ம்மறந்தே.()

பொற்பணைவேழப்புரவிவெள்ளோதிமப்பூவையர்தோ
ணற்பணைமேவுங்கரந்தையர்கோன்ரகுநாதன்மணி
வெற்பணைவாழ்வெமதென்றேமறைத்துமைவேலைவளர்
கற்பணைதோகைமயிலேலவரைவளங்காட்டியதே. (௯௨)

வீரைக்குள்வந்தசிந்தாமணிநீதிவிளங்கவெழு
பாரைப்புரந்தரகுநாதன்வெற்பிற்பகலில்விண்சேர் [டோ
தாரைக்குலம்புவிகாணவொண்ணாதெனுந்தன்மைகொண்
வாரைச்சுமந்ததனத்தாய்நின்செங்கைமறைக்கின்றதே. ()

வழியும்பிரசமலர்முல்லையான்வையமேழும்பொய்யும்
பழியுந்தவிர்த்தரகுநாதசேதுபதிவரையீர்
மொழியுங்குவலயம்பாணியினாலின்றுமூடவந்து
சுழியுந்திரையுங்குமிழியுந்தோன்றித்துயர்செய்யுமே. (௯௪)

சத்தந்தெளிக்குங்கலைவாணர்சங்கத்தமிழ்க்குருகிச்
சித்தங்களிக்கும்ரகுநாதன்றேவைச்சிலம்பின்மணி
முத்தம்பதிக்கும்பவளச்செவ்வாயிளமூரன்மின்னே
யத்தந்தனக்குக்கடல்பொருந்தாதென்பராய்ந்தவரே. (சுரு)

மூந்நீர்சொரிமுத்தமாணிக்கராசிமுகந்தருவி
நன்னீர்சொரிகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைப்
பொன்னீர்பவளத்தமுதெமக்கீயும்பொழுதினஞ்சு
தன்னீர்தருமெனவோமறைத்தீர்செழுந்தாமரைக்கே.(சுசு)

மானார்விழியெனமைந்நீலம்பூத்தவயற்புகலூர்
ஞானகரனிசைசேர்தளவாய்ரகுநாதன்வரைக்
கானார்கருங்குழலீர்சுறவார்கடல்கைப்படுத்தீ
ரானல்விடுத்ததென்னீர்வரையீழத்தகலிடமே. (சுஎ)

நல்லார்நகைக்குபணைவளர்தாளிநணைமலரு
மல்லார்கரந்தைரகுநாதன்றேவைவரையின்மணிக்
கல்லார்கனங்குழையீர்மருண்டீரின்றுகண்டசர
மெல்லார்வரிவளைக்கைபுனைந்தீர்குருகெய்தவுமே. (சுஅ)

ஆரியர்போற்றுமிராமேசர்தாளிணைக்கன்புவைத்த
சூரியன்விரையர்கோன்ரகுநாதன்சுரும்பிலின்று
கூரியவாளிரண்டங்கையிலேந்தியகொங்கையிளங்
காரிகையீருமைமாதங்கியாரென்பர்கண்டவரே. (சுகூ)

வாளும்பரசும்வயிரமுமேகொண்டுமாற்றலரை
யாளுந்தனிவடிவேல்ரகுநாதனணிவரையீர்
தோளுங்கரும்புமெனதாருயிர்வந்தருறைகொள்ள
நீளுங்கணைகொண்டுநின்றுஎவ்வாறுயிர்நிற்கின்றதே. (எ0)

இலையேதழைத்துக்கொழுங்கனல்பூத்திகல்காய்த்துவெய்ய
கொலையேபழுத்தசெவ்வேல்ரகுநாதனைக்கூடலர்போன்
மலையேயெனக்களித்தீர்கடலேலுகைவாய்த்துநின்றீர்
சிலையேபடைத்தநுதலீர் திகைத்ததென்சிந்தனையே. (எக)

நெய்வாய்த்திகன்மன்னர்சோரியின்மூழ்கிநிணமருந்து
மைவாய்த்தவேற்படையான் ரகுநாதன்மணவையன்னீர்
மெய்வாய்த்தகோலவனமுலையார்தம்மைவிட்டெனைக்
கைவாய்த்தமைவிழியாருடன்சேர்தல்கடனல்லவே (எஉ)

செம்பேந்தியமதில்விரையர்கோன்முச்செகமனைத்து
நட்பேந்திவாழுமனுமுறையான்ரகுநாதன்வெற்பி
லம்பேந்திநிற்பதுங்கண்டேனினியுன்றனங்கையினாற்
கொம்பேந்திநின்றென்னிடையூறுதீரக்குறிக்கொள்ளுமே.()

பாவுக்கிசையும்பெயரேபுனைந்துமெய்ப்பாவலர்தந்
நாவுக்கிசையும்பெரும்புகழான்ரகுநாதன்வரைக்
கோவுக்கிறையின்றளித்தீரெமக்குக்கொடுத்தவிரு
மாவுக்கிறையிலிசெய்திர்புகழும்வகையறிந்தே. (எச)

தாருஞ்சிலையுங்கலவையும்பூணுந்தருந்தருவுங்
காரும்பொருவுகையான்ரகுநாதன் காந்தையன்னீர்
வாருந்துவண்டமருங்குலுநாளும்வருந்தலைநீர்
பாருங்கொடிதுகொடிதுகண்டீரிப்பணைமுலையே. (எரு)

கார்த்தலந்தோயுங்கொடிமதில்சூழுங்கரந்தையர்கோன்
பார்த்தலம்போற்றும்ரகுநாதன்வெற்பிற்பசுங்கதிர்ப்பூண்
சேர்த்தலங்கரித்தமின்னேயினிமைச்செந்தேனிங்ஙனே
கூர்த்தலங்கைத்தலமேவியவாறுகொடுமையின்றே. (எசு)

மடற்கேதகைசுற்றுந்தேவையர்கோன்வயமன்னர்க்கெல்லா
மடற்கேசரிதளவாய்ரகுநாதனணிவரையிர்
விடற்கேதுணிவுற்றிருநாகமும்வெளிவிட்டுவெங்கட்
கடற்கேதிருநெடும்பூட்கைதந்திரென்னகாரணமே. (எஎ)

மேவியதாதின்மெலிவுரைத்தேயன்றுமெய்த்தரும
னேவியமேகம்ரகுநாதன்றேவையிலெண்டிசையுந்
தாவியசெங்கண்மடப்பிணைக்கேயிறைதாவவுயி
ரோவியநீகொடுத்தாலென்செய்யாதிவ்வுலகினையே. (எஅ)

சொற்பேறுபெற்றதளவாயெனுந்துரைராயனரு
ணற்பேறுந்தேவைரகுநாயகன்செம்பிநாட்டிலுயர்
வெற்பேறவிட்டுத்துணையார்கண்ணேணிவிரைந்தொளித்தா
லற்பேறுநெஞ்சமினியென்படாதுபெண்ணாரமுதே. (எகூ)

கோங்கார்முகிழ்முலைக்கொம்பரன்னீரண்டகோளமெல்லா
நீங்காதமெய்ப்புகழான்ரகுநாதனெடுங்கரந்தைப்
பாங்கார்கொடிக்கயருங்காரின்றீர்தண்பயோதரத்தே
தீங்காந்தளையிடிலாங்காண்மதிகுலத்தென்னவரே. (அ0)

தூதேநடந்தகவிகுலமாமணிதோன்றுகொடி
மீதேயுயர்த்தரகுநாயகன்றமிழ்வீரையிலிப்
போதேவனத்தினிறைகங்கைமேவப்புரிந்தநனூ்
மாதேயுனையுஞ்சொலலாம்ரவிகுலமன்னனென்றே. (அக)

செய்க்கஞ்சனந்தம்பயில்செம்பிநாடன்சினவடிவேற்
பொய்க்கஞ்சனந்தப்பொருரகுநாதன்பொலங்கிரிமேன்
மெய்க்கஞ்சனந்தகுமுன்னேயதிசயமெல்லியின்
கைக்கஞ்சனந்தங்கவிங்கெனக்கேதனங்கண்ணுற்றதே. ()

கண்டேயெனுஞ்செங்கனிமொழியீர்சிலைக்கார்விசயன்
றிண்டோர்கடவுள்ரகுநாதன்வெற்பிற்செந்தாமரைமேற்
கொண்டேகுவளையிருத்தல்கண்டேனக்குவளையின்மேல்
வண்டேய்கமலமுங்கண்டேனிதுவென்னமாயங்களே. (அ௩)

நீதநந்தாததளவாய்குமாரனெடுங்கருட
கேதனங்கொண்டரகுநாதன்றேவைக்கிளர்ந்தகந்த
மாதனங்கண்டுவந்தேன்றனுக்கோடிவளைகடலைப்
போதனம்போனடையீர்கண்டுநானுடல்பூரிப்பதே. (அச)

ஊனிடமானமுனைவேற்பகைதிகைத்தோடிநெடுங்
கானிடமாகவென்றோன்ரகுநாயகன்கந்தகிரித்
தேனிடபாமொழியீர்கணப்போதிற்செறிவிலங்கை
மானிடமாக்கிவிட்டீருமைப்போலெவர்வல்லவரே. (அரு)

கானேர்பொருப்புமருவியும்போற்கமழ்முல்லையந்தார்
தானேவிளங்கும்புயரகுநாதன்றமிழ்க்கரந்தைத்
தேனேவளவனிலைமைவிட்டேசென்றுதென்பொதிய
மானேரடைதனன்றேபுண்டரீகமணிக்கொடியே. (அசா)

சீலத்துமிக்கதளவாயளித்தருள்செல்வனொரு
காலத்தும்பொய்யுரையான்ரகுநாதன்கரந்தைநகர்
போலத்துலங்கும்பொலங்குழையீர்சென்றுபூம்புனறோ
யாலத்துமாந்தளிர்கண்டோமிதுவென்னவற்புதமே. (அஎ)

நடுப்பதுமாலயமாதனையாய்நடைகற்றவன்றே
கொடுப்பதுங்கற்றரகுநாதன்றேவைக்குவட்டின்மத
னெடுப்பதுமெய்வதும்பாராய்வளைதருமிக்கையினி
லடுப்பதுங்கஞ்சத்தரும்பாகும்வேலுக்கழகல்லவே. (அஅ)

மெய்ம்மலராசனமின்னுன் மிதிலையில்வில்வளைத்த
கைம்மலர்மேகந்துரை குநாதன்கரந்தைவெற்பிற்
செம்மலர்மேவவுந்தேனுளதேயன் றித்தேனிடத்தி [கே. ()
லம்மலர்தோற்றுங்கொல்லோசொல்லுவாய்முல்லையாரணங்

வணங்காதசெவ்வைப்பொருமால்சொரிமுத்துவன்னிபன்
னணங்காருமார்பன்ரகுநாதன்றேவையணிவரைமேற்[பொன்
குணங்காதலிக்குநெடுமீனந்தன்னுடன்கூடியத்த
மிணங்காதிணங்குமழியாதகன்னியிளம்பிடியே. (௧௦)

முறையுந்தருமமுநீங்காதமான்முப்முரசுமன்னர்
திறையுந்தருமுன்றிலான்ரகுநாயகன்றேவைவெற்பி
னிறையுங்கமலத்திருப்பதல்லாலிந்திரநீலத்தின்மே
லிறையுங்குடிபுக்கிருப்பதுண்டோபுவியேழினுமே. (௧௧)

கலைக்கேநெடுங்கடலன்றனைக்கலங்காத்தவன்செஞ்
சிலைக்கேவிசயன்ரகுநாயகன்றமிழ்த்தேவையிலா
விலைக்கேகருங்கொழுந்தேந்துமின்னேகுன்றியற்கையன்றே
வலைக்கேவளர்வதென்றேசங்கபாணியமர்கின்றதே. (௧௨)

பணையேதடங்கண்டுயிலாதவிரைப்பதியுரக
வணையேதுயிலும்ரகுநாதன்வெற்பிலென்னருயிர்க்குத்
துணையேயுனைவந்திரந்தேற்குவெந்துயர்தோன்றவடிக்
கணையேபிடித்துச்சிலைவிடுத்தாய்கற்றகல்விநன்றே. (௧௩)

நெய்க்கின்றகூந்தற்கொடியிடையீர்மனுநீதியினன்
மெய்க்கின்றவாய்மைரகுநாயகன்கந்தவெற்பிலிப்போ
தய்க்கின்றமான்மறியும்புண்டரீகமுமோரிடைநீர்
வைக்கின்றநீதியினலிணையோவஞ்சிமன்னனுமே. (௧௪)

பிழியாததெவ்வர்க்கும்பின்னிட்டபேர்க்கும்பிறங்கிலேவே
லெறியாதவன்ரகுநாயகன்றேவையிலென்றுங்கண்டே
யழியாதசிற்றிடையீர்பொருந்தாரையடக்கியபீர் [யின்றே.
பொறியாதுவிட்டதென்னோபொதிசூழ்ந்தபொற்கோட்டை

காரணவுங்கொடைவீரையர்கோனன்றுகஞ்சன்விட்ட
வாரணம்வென்றரகுநாதன்வெற்பின்மணக்குறிபோற்
றோரணமுத்தத்தொடமொவிளந்தளிர்தோன்றவெதிர்
பூரணகும்பம்வைத்தாய்மலர்வீட்டிற்பொலங்கொடியே. ()

அலம்பணிவீரைபுடைசூழும்வீரைக்கதிபனெழு
தலம்பணிதேவையர்கோன்ரகுநாதன்றமிழ்க்கரந்தைப் [ணர்
புலம்பணிமேகலைப்பொன்னேமறந்துங்கைப்போதின்மின்
சிலம்பணியாரென்பதோவரிபாய்வண்டுசேர்க்கின்றதே (கூஎ)

நிதிகொண்டவண்மைத்தளவாய்குமாரனிலந்தழைக்குந்
துதிகொண்டதேவைரகுநாதன்மால்வரைத்தோகையன்னீர்
கதிகொண்டதாமரைதாங்கிநீன்றீர்செங்கலசவிம்ப
மதிகொண்டுதாங்குமின்மாலாமெனக்கலர்மாதென்னவே. ()

மழையணிவார்குழன்மின்னிடைமாதர்மருளவிசைக்
கழையணிதேவைரகுநாதன்வெற்பிற்கதிரொளிபோ
டுழையணியாழின்விரலாலிசைத்துள்ளுருக்குகலாற்
றழையணிகாளத்தவரெனும்வாய்மைதகுமுமக்கே. (கூகூ)

மூத்திக்குவேலிதழைக்கின்றதேவைமுதல்வனருட்
பத்திக்குவாய்த்தரகுநாதசேதுபதிவரைமே
லெத்திக்குங்கண்டறியோமணங்கேபச்செனுங்குழைசே
ரத்திக்குஞ்செம்மலர்காட்டிநின்றுயின்றதிசயமே. (சOO)

மையாழிவைப்புகழ்செம்பிநாடன் மறந்துப்பொய்யா
மெய்யால்விளங்கும்ரகுநாதன் வெற்பில்வெஞ்சோகாவடையக்
கையாரவேலின்றிசைத்திடக்குன்றங்கவிகைசெய்தாற் [யே.
பொய்யாதனைச்சொல்லலாங்கண்ணனென்றுபூங்கொடி

பலவுங்கமுகும்பசும்பனிக்கோடும்படைத்துநின்று
நிலவுங்கரந்தைரகுநாதன்காக்குநெறியியல்பா
மிலவுந்துகிரும்பொருமிதழாய்நின்னிருகையினுங்
குலவும்படிசெங்கதிர்மாழையேந்திக்குலாவுவதே. (௧0௨)

காக்குங்கருணையுங்கல்வியும்வாழ்வுங்கவிமதுர
வாக்குந்தழைத்தரகுநாதன்றேவைவருவிருந்தாத்
தேக்கும்படிகனிவாயமுதாரவந்தேற்கினிமை
நோக்கந்தனைமறைத்தாலியல்போவஞ்சிநுண்ணிடையே. ()

பன்னுந்தமிழ்ப்பயிர்வாடாதுமாரியிப்பாரின்முத்தும்
பொன்னுஞ்சொரியும்ரகுநாதன்றேவைப்பொருப்பிலுயர்
மன்னும்பெரியவலைரநீத்துறுகண்மருவுகையாற்
பின்னுங்குழலணங்கேயறிந்தேனுன்றன்பேதைமையே. ()

தெளிவேகவெண்குடைதன்னற்குளிர்செகமேழுமிசை
யொளிவேபரவும்ரகுநாதன்றேவையிலோங்குபசுங்
கிளியேயெனுமொழியீரிரங்காதின்றுகேழ்கிளர்தண்
ணளியேமறைத்தனற்கொடியாரென்றறிந்தனமே. (௧0௫)

வேரிப்பசுந்துணர்வார்குழலீர்கலிவெப்பொழிக்கு
மாரிப்பருவம்ரகுநாதன்றேவையில்வண்குடத்தே
பூரிப்பநெஞ்சிற்கருதாமனஞ்சிற்புரிந்ததுகை
நீரிப்படிக்கலந்தாற்பிறிதேதுநிகழ்த்துவதே. (௧0௬)

ஆர்க்குங்கலாபமயிலனையீர்பகிரண்டமெல்லாம்
போர்க்கும்புகழ்தளவாய்ரகுநாதன்பொருப்பிலணி
சேர்க்குந்தனங்கண்மலைபோற்கண்மூடித்திறக்குமுன்னே
பார்க்கும்படியிப்படிக்கண்டிலேமொருபாரினுமே. (கoஎ)

திவளக்களிவண்டிசைபாடத்தானந்தினம்பொழியுங்
கவளக்கடாசலத்தான்ரகுநாதன்கரந்தையன்னீர்
தவளக்குளிர்முத்தமல்லாமலத்தந்தனிற்சிறந்த
பவளக்குலமும்படுவதுண்டோமலர்ப்பங்கயத்தே. (கoஅ)

ஒன்னருயிர்விடச்செங்கையில்வேலையுறைவிடுங்கைப்
பொன்னுடர்தாருரகுநாதன்றேவைப்பொலங்கிரிவேள்
வின்னாண்மறைத்தகரும்பனையீரந்தவேள்வனச
வன்னாண்முகையென்கொலோவினையேனுயிர்வாட்டுவதே.()

சினத்தாமரையரெல்லாந்தனையேதொழச்செங்கடுக்கை
யினத்தாமரைத்தொழுமால்ரகுநாதனையெண்ணலர்போங்
கனத்தாமரையிருள்வார்குழலீர்கட்கருஞ்சுரும்பென்
மனத்தாமரைபுகுமென்றேகையாரமறைக்கின்றதே. (ககo)

தரியார்வணங்குந்தளவாய்குமாரன்செந்தாமரையாள்
பிரியாததேவைரகுநாதன்வெற்பிலென்பேரறிவாம்
விரியாழிமாயக்கயல்குடியாதுவிலக்கியபின்
கிரியானுழக்குதனன்றேமழலைக்கிளிமொழியே. (ககக)

சீதக்கமலவயற்றேவைகாவலன்செந்தமிழுங்
கீதக்கலையும்வல்லான்ரகுநாதன்கிரியினெடுங்
காதற்கடல்வெள்ளநீந்துதற்கேகுடங்காட்டியநீ
பேதக்கவலையொளித்ததென்னேபுகல்பெண்கொடியே. ()

மொய்தோய்பகைஞர்வரைபுரம்பாய்ந்துமுழைப்படுத்துங்
கைதோய்கடாசலத்தான்ரகுநாதன்கரந்தைவெற்பின்
மெய்தோயகின்றவுயிர்வாடுமென்பதும்விட்டிங்ஙனே
மைதோய்மழைக்கண்மறைத்தனன்றோசிலைவாணுதலே. ()

வயத்துக்கிசைந்தபுகழ்களவாய்தந்தமைந்தன்மிக்க
செயத்துக்கொருதுங்கவேள்ரகுநாயகன்றேவையிலம்
புயத்துக்குவலயந்தார்புனைந்திரிப்பொறையமைத்தா
னயத்துத்தருமனென்றேமடவீர்சொல்லுநானிலமே. ()

சேல்கொண்டநீலக்கடல்சிவப்பேறச்சிலைநிணித்துக்
கால்கொண்டதேவைரகுநாதன்வெற்பிற்கருவிளப்பூ
மேல்கொண்டகாந்தட்குலத்தோடுங்கூடவிளங்கிழையீர்
மால்கொண்டகாலத்துமென்னோமணக்கமலர்ந்திலவே. ()

திரைவந்தமுத்தும்வரைவந்தபொன்னுந்தெவ்வேந்தர்தந்து
நிரைவந்துபோற்றும்ரகுநாதன்றேவையினேரிழையீ
ருரைவந்துதேற்றவுணர்ந்தீரென்னெஞ்சமுழலைவைத்த
வரைவந்தலரியென்கண்ணுனதென்னகண்மாயமிதே. (௧௧௯)

வெங்கயங்கேதம்பொருந்தாதருள்புகழ்வேந்துயர்த்த
செங்கையங்கேதனமால்ரகுநாயகன்றேவைவெற்பிற்
பங்கயங்கேகயம்போல்விரமுதம்பசுங்கனின்ற
கொங்கையிங்கேவிட்டிருந்ததென்னேதண்குவலயத்தே. ()

சுளைப்பாரமுட்குடமூற்றுசெந்தேறல்சுனைப்பரந்தா
திளைப்பார்கரந்தைரகுநாயகன்றமிழ்த்தேவையன்னீர் [ர்
முளைப்பாரையென்றும்புதைக்கப்படாதென்றுமுதுணர்தோ
விளைப்பாரையின்றுபுதைத்ததேதனத்தைவிடுகின்றதே. ()

வங்கந்தழுவுங்கடல்சூழுந்தேவைக்குவாய்த்ததள
சிங்கங்கருணைரகுநாதன்செம்பொற்சிலம்பின்மலர்க்
கொங்கங்கமழுங்குழலீர்முகத்தைக்குபேரனெனச்
சங்கம்பதுமமும்வேண்டுமென்றேகண்ணிற்சார்கின்றதே. ()

கடந்தோய்மதகளிறன்னைந்தம்பரகண்டன்முத்து
வடந்தோய்தனத்தியர்வேள்ரகுநாதன்வரையனையீர்
தடந்தோயமுற்களமையாதென்றேநிறந்தாழுமல
ரிடந்தோயவின்றுமதுகரங்கூடியிருக்கின்றதே. (௧௨0)

சீதகங்காதரற்கன்பாம்ரவிகுலசேகரன்பூ
மாதகஞ்சேர்புயத்தான்ரகுநாதன்மணிவரைக்கோ
மேதகஞ்சேர்குழையீரரிமாவொடுமெல்லியகைப்
போதகஞ்சேர்ந்தபகையில்லையோவுங்கள்பூம்புனத்தே. ()

திருபாற்புதுமுத்துந்தொன்னுள்வயிரமுந்தந்துதெவ்வ
ரிருபாற்பரவும்ரகுநாதன்றேவைபிலேமவெற்பில்
வருபாற்குறுந்தொடியீருலவாவிந்துமண்டலத்தே
யொருபாற்கரனண்ணினுலென்படாதிவ்வுலகெங்குமே. ()

நேர்கின்றசிற்றிடையீர்முகினீருண்ணநீட்டுகைம்மா
வூர்கின்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளிரங்க
வார்கின்றவஞ்சனக்கண்மறைத்தீரிந்தமாமறைத்தாற்
சார்கின்றபுண்டரிகத்தாலுமக்கென்னதாழ்வுமக்கே. ()

தோடார்பசுங்குழையீர்துரைராயன்சுரந்துநறை
யேடாருந்தாமன்ரகுநாதன்வெற்பிலிரவலர்க்கே
வீடாதகுன்றத்திசையொளிதோன்றவிரும்பியத்தம்
வாடாதளித்ததனுற்சொல்லலாமுமைவள்ளலென்றே. (௧௨௪)

அதிராவிருந்தவிருட்குநல்லார்கலியாம்பனிக்குங்
கதிராயுதித்தரகுநாதன்றேவையிற்கைம்மலர்க
ளெதிராயதாணுவிற்கேற்றாலவஞ்சமிமையவர்க்கு
முதிராததீஞ்சொற்கிளியேபுனைதன்முறையல்லவே. (௧௨௫)

வஞ்சத்திசைமன்னரோடிடவாணர்வறுங்கலியு
மஞ்சக்கனகந்தரும்ரகுநாதனருட்கரந்தை
நெஞ்சத்தின்மாலென்றுணர்ந்திக்குடந்தந்துநீர்மலர்ப்பூங்
கஞ்சத்திளந்திருவென்றோநற்பாவையைக்கைக்கொண்டதே

வெல்லும்பதாகைத்தளவாய்குமாரன்கைவேழமும்போர்
மல்லுங்கடந்தரகுநாதன்றேவையில்வல்லவர்க்குப்
புல்லும்படையென்பதோகொலைநாட்டம்புகைமறைத்துச்
சொல்லும்பொழுதணங்கேகுயத்தானுந்துயர்செய்வதே. ()

செங்கைத்தருவினிசைவல்லிசேர்தளசிங்கமலர்
மங்கைக்கினியரகுநாதன்றேவையில்வார்க்கடங்காக்
கொங்கைக்குநேரில்லையென்றோவிடுத்துவெங்கூர்விழிக்கு
மங்கைத்தலமின்றுநேரென்றுகாட்டியதாரணங்கே. ()

களிக்குங்கயல்வெடிபோயுயர்வானவெண்கங்கைத்தெண்
குளிக்குங்கரந்தைரகுநாதன்வெற்பிற்குவலயங்காத் [ணீர்
தளிக்கும்படிப்பெண்ணரசேதுணிவுற்றவ்வாழியுயி
ரொளிக்கும்படிவிடலாமோநெறியன்றுனக்கிதுவே. (௧௨௯)

தடமேவுதேவைப்பதிபுரப்போன்றளவாய்மகிழத்
திடமேவுவெற்றிரகுநாதன்வெற்பிற்சிறியவனு
வடமேருவெற்புக்கெதிர்நிற்குமோவரிவாளரவப்
படமேவுமல்குன்மின்னேயுய்யுமாறின்றுபார்த்தருளே. ()

வரமேந்துவெற்றியரக்கர்பிரானுயிர்வாட்டவொற்றைச்
சரமேந்துதேவைரகுநாயகன்றமிழ்வீரைவெற்பி
னுரமேந்துதுங்கள்குலத்தியல்போவனத்தூடுவரக்
கரமேந்திநின்றமடவீர்கலைகளவாகின்றதே. (கருக)

வரிவளைநாலுமறுகூடுலாவிவயங்குமுத்தஞ்
சொரிதருதேவைரகுநாதன்வெற்பிற்சுருதிபயின்
றரிவளர்பூங்குழலாய்தமியேனையிங்காள்வதற்குக் [வதே.
கரிவெளிதோன்றப்பிணைபேன்றொடர்ந்தின்றுகைக்கொள்

சொற்பாவலர்தங்கிளைவாழச்செம்பொன்சொரியும்வண்மை
நற்பேறுதேவைரகுநாதன்வெற்பினலந்தருமிப்
பொற்பாருநங்கையைச்சேர்ந்தாலுயிரைப்புரப்பதல்லால்
விற்பாவியமணிவெங்கரத்தூடென்கொல்வீழ்விப்பதே. ()

கார்த்தாமவார்குழலீர்பசுந்தேனுமிழ்கானறுந்தார்
வேர்த்தாமமுல்லைரகுநாயகன்றமிழ்வீரையன்னீர்
பார்த்தாதரவொடுபோர்ப்பார்மறையிற்பரிந்தகத்தே
சேர்த்தாரென்றேதனத்தாரிவவேதஞ்செயுந்துணிவே. ()

சிந்தாடவந்தவர்தம்மோடெழிலைத்தெரிந்துகொள்ள
வந்தாடவர்பணிமால்ரகுநாதன்வரையணங்கே
பந்தாடல்கண்டனமம்மானையாடலும்பார்க்கவரந்
தந்தாடல்செய்யினுனக்கெய்துங்காண்வெகுதன்மங்களே. ()

இல்லாரைக்கற்பகமாக்கியுடையரெனினுமிகப்
பொல்லாரைக்கொல்லுஞ்செயரகுநாதன்பொருப்பனையீர்
வல்லாரைக்கற்பவகையறிந்தேகமுன்னுவாகடமா
நல்லாரைக்கோரியகையாந்தகரையுநாடுவமே. (கருசு)

விலைப்பாரரசரறியக்குனித்திகல்வென் றுவந்த
சொலைப்பாவலர்புகழ்மால்ரகுநாதன் சொனவரைக்குத்[தான்
தலைப்பாகைதுண்டமென் சோமன் முன் வத்திரந்தனிற்கலந்
மலைப்பாரமாவணச்சேலையிலாதமணமெனவே. (கநஎ)

கண்டரிகம்பவுவாவைத்தெறலிற்கருதலர்வாள்
கொண்டரிகம்பமிலாரகுநாதகுபேரன்வரைப்
பண்டரிகம்புளமின்னேபொரவத்தம்பார்த்திருந்த
புண்டரிகம்பிணைமேற்பாயத்தந்திபுறப்பட்டதே. (கநஅ)

தீனத்தைவென் றகொடைப்புகழ்கேட்குஞ்செவிக்கமுத
பானத்தையொத்தரகுநாதசேதுபதிவரைவாய்க்
கானத்தைவானத்தைநேர்சொலிடையொருகன் னியத்த
மீனத்தைநாடிச்செலக்கும்பராசிவெளிப்பட்டதே. (கநகூ)

மஞ்சாங்கருதலர்போர்ப்படைமேற்சண்டமாருதம்போல்
விஞ்சாங்கமூலபலரகுநாதன் வியன் சிலம்பிற்
பஞ்சாங்கமோதிமறைகாட்டிச்சொர்க்கமிப்பாற்படுத்தி
யஞ்சாங்குலத்தவர்பார்ப்பாரைச்சேர்ந்தததிசயமே.

பொருப்பதெதிர்வரல்போற்கஞ்சனல்வந்தபோதகத்தின்
மருப்பதொசித்தசயரகுநாதன் மணிப்பருவி
பருப்பதமீதுமலருஞ்செங்காந்தள்பரவையிற்பூத்
திருப்பததிசயங்காண்குன் றவாணரிளங்கொடியே. (கசக)

நாலாயுதத்தையிகன்மேற்றயித்தியர்ஞாட்பிலெதிர்
மாலாயுதத்தைப்புரிரகுநாதன் வரையணங்கே [ற்
வேலாயுதத்தைக்கைக்கொண்டுநின்றுயெதிர்வெற்புமெய்தா
காலாயுதத்தையனென் றுனையேதொழுங்காசினியே. (கசஉ

தொருந்தளவாய்மகிழ்தெய்வீகத்தேவைத்துறைக்கரசைச்
சருந்தவிலோசனத்தான்ரகுநாதன்சயிலமின்னே
புருந்திறையைவர்தெரியாமன்மச்சபுரத்திருக்க
மிருந்துரியோதனபாரவணிகள்வெளிப்பட்டவே. (கசங)

அங்ககலிங்கமலையாளமீழமனைத்தும்வென்ற
சிங்கவிசயசயரகுநாதன்சிலம்பிற்பொன்னே
சங்கிலியாரையுங்கண்டேன்பரவைதனையுங்கண்டான்
மங்களசுந்தரனென்றெனையேதொழுமண்டலமே. (கசச)

ஆலங்கையாதவமுதின்முன்னுண்டலகையைக்கொ
லேலங்கையாதருண்மால்ரகுநாதன்வெற்பேந்திழையீர்
சேலங்கைக்கொண்டபின்னேமலைபாளமுந்திண்டுக்கல்லைப்
போலங்கையாமஃதில்லாதபோதுபுலப்படுமே. (கசரு)

பாவூர்சங்கிராமவிசைசூதர்பாடப்பவனிவரு
மாவூர்நகுலனெனும்ரகுநாதன்வரையனையீர்
கோவூர்முன்காட்டியபின்குன்றத்தூர்வழிகூட்டியப்பா
ஞவூர்நங்காஞ்சிபுரங்காட்டுதருெண்டைநாட்டியல்பே. ()

எண்கட்டுமானபுற்றீறூன்றுடலர்படையேங்கவடுந்
திண்கட்டுவாங்கத்துரைரகுநாதவசீரன்வரைப்
பண்கட்டுமென்மொழியீர்நீர்மிகவும்பலரறியக்
கண்கட்டுவித்தையுஞ்செப்பிடுவித்தையுங்கற்றவரே. (கசஎ)

தாவியங்கற்றமிலாமற்பொருதச்சமரிலறை
கூவியங்கத்திகல்வெல்ரகுநாதகுமுணன்வெற்பி
லோவியங்கற்பகவல்லியன்னீரிவ்வுலகியற்கை
காவியங்கற்றவர்க்கேயத்தமாகுங்கடபடமே. (கசஅ)

கண்டரிதன்னகயுரத்தையுமூக்கையுங்காதையும்வாள்
கொண்டரிகொண்டல்ரகுநாதன்றேறவைக்குலவரைப்பூ
வண்டரிகங்குற்குழலீர் நும்முந்திமடியலையாற்
புண்டரிகங்கண்முழுகத்தெரியும்புளினங்களே. (கசகூ)

நாளத்தையம்புயவன்னப்பணைச்செம்பிநாடன்சக்கிர
வாளத்தைவென்றபுயரகுநாதன் மணிவரைவேள்
காளத்தைவெல்லுரைநாடகப்பாவையைக்காட்டுஞ்சும்மா
தாளத்தையேந்திநின் றீர்மத்தளமுந்தருகுவனே. (கடு0)

இடனுகமற்றைவலனுகச்சாரியியற்றிடுவாட்
டிடனுகவமெச்சியல்ரகுநாதன் சிலம்பிற்பெண்ணே
கடனுகத்தந்தவரையெதிரேவரக்கண்டுமுறி
யுடனேகொடுக்கவுடையார்பிணையையொளிப்பதென்னே. ()

படியுமமராருல்கமுமாசையும்பாதலமுங்
கெடிகொளிசைரகுநாதவசீரன்கிரியணங்கே
கொடியுமுரசுங்கணையுஞ்சிலையுங்கொடாமலணி
முடிமாத்திரமதவேளுக்களித்தன்முறையல்லவே. (கடுஉ)

கேட்டத்தகுவருமுட்குமதுகைக்கிளர்புலவர்
பாட்டத்தகுரகுநாதசேதுபதிவரைவாய்
நாட்டத்தகுவளைவேழங்குவளைநளினமல்லி
காட்டத்தகுமிளநீரொன்றுகாட்டல்கணக்கல்லவே. (கடுஙு)

ஆரங்கராசலமாநிதிவீரர்க்களித்திகன்மேற்
போரங்கமாகவருரகுநாதன்பொருப்பணியீர்
பேரங்கமாகும்பகோணத்திற்பாதியைப்பின்மறைத்தீர்
சாரங்கபாணியெனும்பேரெவ்வாறுதகுமுமக்கே. (கடுச)

சேண்டவர்வாழ்திருத்தேவையையாளுந்திருமணிமார்
பாண்டவர்தூதன்ரகுநாதசேதுபதிவரைவாய்
நாண்டவர்முன்னிட்டதிலையொளித்துத்தன்னற்பெயரைப்
பூண்டவர்தானத்தைத்தான்வாங்கிக்கொள்ளப்புறப்பட்டதே ()

விலையைமறைக்குங்கனகிரீடிவிவேகத்தெண்ணெண்
கலையைமறைக்குமனுரகுநாதன்கவின்வரைவாய்ச்
சிலையைமறைக்குநுதலீர்முன்னுகத்தெரிதலின்றி
வலையைமறைத்துவைத்தீர்பற்றவோசக்கிரவாகத்தையே. ()

படமினியார்வரைந்தெண்டிக்குங்காட்டெழிற்பார்த்திபன்
திடமினினீண்மந்திரவாள்ரகுநாதனற்றேவைவெற்பிற் [கைத்
றொடமினியோங்குமணியீர்மைவாரியைத்தூர்த்தபின்பு
குடமினியேதுக்குநீரேவலியக்கொடுக்கினுமே. (கருஎ)

வெம்பிற்கரளமெனக்காய்ந்திகலைவிடுத்துத்தன்னை
நம்பிற்கருணைபுரிரகுநாதநரேந்திரன்வெற்பிற்
செம்பிற்கனகமணியணியீர்முனங்கேசவன்கை
யம்பிற்கரன்படவெற்பரணங்களகப்பட்டவே. (கருஅ)

வல்லாரங்காட்டியபம்பரத்திற்சுழல்வாம்பரிமேற்
செல்லாரங்காட்டுமுரரகுநாதன்றன்றேவைவெற்பில்
வில்லாரங்காட்டுமணியீர்மதிப்புமிகுந்தனக்
கல்லாரங்காட்டியநீரேகல்லாரமுங்காட்டினன்றே. (கருகூ)

அலசத்தைவாளியெனநேர்நவையையகற்றியபி
நலசத்தைநேயகொண்மதியூகியாம்ரகுநாதன்வெற்பிற்
பலசத்தைநீடுமுவரிமதித்தும்பருக்குவைத்த
கலசத்தைக்காட்டியமுதத்தையேயதுகரந்ததுவே. (ககூ0)

தவளையிற்செல்வளர்காவினிற்றுவத்தராமுதிக்
கவளையிற்செல்செம்பியாள்ரகுநாதன்கனகவரைத்
துவளையிற்செல்பவராமரையிர்மலர்தோறுந்திரி
குவளையிற்செல்வண்டுகோங்கிற்செல்லாதெதென்கூறுகவே. ()

வண்டிறகாலவலர்முல்லையான்கவிவாணர்செய்புள்
கொண்டிறவீகைதருரகுநாதகுபேரன்வெற்பிற்
பண்டிறவாமருந்தன்னீர்வெந்தாகப்பசிதணிக்கக்
கண்டிறவாமலிளநீர்கொடுத்தென்கவையில்லையே. (கசஉ)

மித்திரமன்னர்மகிழப்பகைஞர்முன்வீழ்ந்துதொழச்
சத்திரமன்னவருரகுநாதன்சயிலவெற்பிற்
சித்திரமன்னகுயிலேதனத்தைத்தெரியவைத்துப்
பத்திரமன்னலறிவுறிற்சேதம்படைத்தவர்க்கே. (கசங)

தளையாடுகாலொடொன்னார்திறைகட்டுஞ்சமுகத்திற்பொற்
கிளையாடுசேதுவைத்துரைரகுநாதகிரிவெற்பில்
வளையாடுகைத்தலத்திர்பாச்சிகைக்குண்மறைத்துமனம்
விளையாடச்சூதின்கனகவடங்கள்வெளிப்பட்டவே. (கசச)

அனமிகத்தோன்றுவயற்செம்பிநாடனயன்றந்தைவா
கனமிகத்தோன்றுதுசரகுநாதன்கனகவெற்பின்
மனமிகத்தோன்றுமொருமாமலருண்மறைந்திடவி
தனமிகத்தோன்றுமபிமானமுள்ளவர்தங்களுக்கே. (கசரு)

தேவுளிருக்கும்வளர்செம்பிநாடனற்றேவையையாள்
பூவுளிருக்கும்வளரகுநாதன்பொருப்பனமே
மாவுளிறைவர்க்கெதிர்வைத்துக்கானல்வழக்கிதன்றிக்
கோவுளிருக்கவிங்கேதுக்குமாலிகுசக்கனியே. (கசசா)

சிற்றுலவட்டங்குடைகொடிசாமரைசேரப்புடை
நற்றுலமென்னவருரகுநாதன்மைந்நாகமின்னே
கற்றூர்பணிநற்றிரிகூடவெற்பெதிர்காட்டித்திருக்
குற்றுலமாந்தலமுங்காட்டினுனிட்டைகூடுவனே. (கசுஎ)

வில்வழக்கத்திற்றனஞ்சயன்கன்னன்விதுரனெனச்
சொல்வழக்கத்துரையால்ரகுநாதசுகுணன்வெற்பிற்
செல்வழக்கக்குழலீர்சாட்சிகைப்பத்திரமிவையில்
வல்வழக்கிட்டுவெளிப்படுவார்முழுவம்பர்களே. (கசுஅ)

நிக்கிரகமேனையநுக்கிரகமாமநுநீதிபுரி
யுக்கிரமகாதளவாய்ரகுநாதன்வெற்பேதிமமே
சக்கிலியாயினர்பார்ப்பாருங்கைக்கொள்ளச்சம்பந்தத்தா
லக்கிரமமென்றுகுயவரிதைவெளியாக்கினரே. (கசுகூ)

சொற்பதக்கற்பனையோரெழுத்திற்சுத்தஞ்சோர்வதிலா
மற்பதக்கத்தந்தருரகுநாதமகிபன்வெற்பி
னிற்பதக்கற்பகவல்லியன்னீர்வெகுநேர்த்திநங்கைப்
பொற்பதக்கங்கொளமார்பிற்கடகம்புறப்பட்டதே. (கஎ௦)

பூமான்பெருஞ்செல்வம்பாமான்கலைகள்பொருட்கொடைக்
காமான்கரதலமால்ரகுநாதன்கவின்வரைவாய் [குக்
மாமான்மடம்பிலேயெதிர்கொள்பவர்வைத்தனரோ
கோமான்வெளிப்படுமுன்னெதிர்பூரணகும்பங்களே. (கஎக)

விட்டங்கொடுக்குமுனிவைமுன்னம்பியவீடணற்குப்
பட்டங்கொடுக்கும்ரகுநாதசேதுபதிவரைவாய்
வட்டங்கொடுக்கும்பணத்துக்குமேற்றனம்வண்டர்நட்பா
லிட்டங்கொடுக்குமைமேனட்டவர்க்கும்வந்தெய்தியதே ()

நூலாயிருக்குநர்க்கத்தரீதஞ்சதநூறளிக்கு
மாலாயிருக்கும்ரகுநாதன்றேவைவரைமயிலே
மேலாயிருக்கினும்பார்ப்பாரிரவலர்மேலன்றிக்கீழ்
போலாயிருக்கினுமீகைத்தனத்தர்புரவலரே. (களங)

போரூடுசென்றுவலவனைப்போலத்தைபுத்திரற்குத்
தேரூர்சலதரமால்ரகுநாதனற்றேவையன்னீர்
நீரூர்மைநோக்கரும்வெட்கியொளிக்கரீதானத்திலே
யோரூசிமேலிருபம்பரமாட்டுமுபாயநன்றே. (சுளச)

திசைபுகழ்கன்னன்குபேரன்விசயன்சிபியெனச்சொல்
லிசைரகுநாதன்மணிவரைமானனையீருமது
வசைதீர்கசகர்னவித்தையைப்பார்த்துமகிழ்ந்தனமேற்
பசையுறுகோகர்னவித்தையெப்போதினிப்பார்ப்பதுவே. ()

முடுக்கவருதிரண்மல்லினராவிமுடியவறை
கொடுக்குமுரரகுநாதன்வரைமலர்க்கொம்பனையீர்
அடுக்குங்கொனீர்கணையாழிமுகத்திட்டடக்கியபி
னிடுப்பினிற்குண்டலமார்பிற்சிலம்புவந்தேறியதே. (களசு)

திட-முமுரமுமிசையுங்கொண்டச்சமுந்தீமையுங்க
படமுமொழித்தரகுநாதசேதுபதிவரைவாய்க்
கெடவாத்தியமறிவித்தீரினியுங்கள்கீதத்தையு
மடவீரறிவிக்கினுன்கொட்டிக்காட்டுவன்மத்தளமே. (களஎ)

சங்கையிலாமலிரப்போர்க்குதவவுதாரகிதிப்
பங்கயமன்னரகுநாதசேதுபதிவரைவாய்
மங்கைநல்லீரிதுநல்லாச்சரியமுன்மையுங்கணூக்
கங்கைகடக்குமுன்னேசித்திரகூடமென்கண்ணுற்றதே. ()

வைம்மையுடையகைவேலாலொன்னார்பொன்மணிமுடிக்
பைம்மையறுத்தரகுநாதசேதுபதிவரைவாய் [குப்
நைம்மையுடையநுசுப்பீர்வரச்சங்கநாடுவதிற்
கைம்மையுடையவர்க்கேனணிமைபெய்தங்கச்சிமிழே. ()

இங்கிதரத்தினப்பகுதிகொணர்ந்துமுனெண்ணிமன்னர்
பங்கிடுமுற்றரகுநாதசேதுபதிவரைவா
யங்கிதமாகத்தருசடகோபங்கண்டாச்சுதமுன்
சங்கிடுதோளிட்டசக்கரங்காட்டத்தகுமினியே. (க௮௦)

அளையுண்டிடநவநீதந்திருடிமுன்னாய்ச்சியர்கைத்
தளையுண்டமெய்ரகுநாதன்சிலோச்சயத்தையனல்லீர்
வளைசெண்டுமீன்சொன்மதுரையடைத்துவரிமுன்வென்றீர்
திளையுண்டமேருவும்வென்றிடினீரந்தத்தென்னவரே. ()

குமையவரைநிமிடத்திலொன்னார்மெய்குவியக்கைம்மேற்
சமையவரைநிருபன்ரகுநாதன்றடவரைவா
யமையவரையுயர்சொர்க்கமுன்காட்டியருளியநீ
யிமையவரையொளிக்கத்தகுமோசொலிமேரந்திழையே. ()

விளவாய்வருமிகல்கன்றுலெறிந்துமுன்வென்றுவந்த
தளவாயரசர்பிரான்ரகுநாதன்றடவரைவாய்க்
குளவாய்தனிலுங்கள்விற்குளச்சேல்கள்குதிக்குமென்றோ
களவாய்மறைத்துவைத்தீர்மடவீரிருகைப்பிடித்தே. (க௮௩)

கோவைத்துறைக்குப்பதினாயிரம்பொன்கொடுத்திசைகொ
டேவைத்துறைக்குத்துரைரகுநாதன்றிகிரிமின்னே
யேவைத்துறைக்குள்வெறிகொண்டுசெங்கிலியேந்துமத
மாவைத்துறைக்குவெளியேவிடிற்பழியந்திடுமே. (க௮௪)

கடைமுன்னர்நின் றுமுடிமேற்றமதிருகைகுவித்துப்
படைமன்னர்போற்றும்ரகுநாதன்சேதுபதிவரைவா
யிடைதான்குறைந்ததுமச்சமுங்காட்டுவதில்லையென்றுன்
மடவிருமதுதனத்தையெவ்வாறுமதிப்பதுவே. (க௮௫)

அமரர்மனிதர்நரமுதாசநராகவுக்கிர
சமர்செய்செயரகுநாதன்சிலோச்சயத்தையனல்லீர்
நமனையடக்கிக்கடவூருங்காட்டியஞாயத்தினு
லுமையிவ்வுலகிலமுதகடேசரென்றோதுவரே. (க௮௬)

ஈரஞ்சுகண்டனிறக்கவின்னோர்குடியேறமகி
பாரஞ்சுமக்கும்ரகுநாதசேதுபதிவரைவாய்
வீரஞ்சுதாரிப்பதின்றிமுன்கேடகம்விட்டெறிந்து
போரஞ்சுவாரிற்கைவாளையொளிப்பதென்பூங்கொடியே. ()

சென்றத்தைக்கண்டகப்போரிற்றினந்தள்ளிச்செய்யபர்நா
ணின்றத்தைக்கண்டரகுநாதன்மால்வரைநேரிழையீ
ரொன்றத்தைக்கண்டிருக்கச்சூர்செங்கற்பட்டுயர்ந்தகழுக்
குன்றத்தைக்கண்டனன்காண்பதெப்போதினிக்கோவளமே.

செல்லூரப்பார்த்திபராகுமொன்னருயிர்தின்னநமன்
பல்லூரப்பாற்கொல்ரகுநாதசேதுபதிவரையீ
ரல்லூரைப்பாற்பொன்னனையீரிப்போதுங்களத்திப்பட்டு
வல்லூரைப்பார்த்தனன்பார்ப்பேனினிநெய்தல்வாயலையே ()

செல்லக்கைம்மாறுபடையார்க்குதவுமைசேரலரை
வெல்லக்கைபோயவைவேல்ரகுநாதன்விலங்கற்பொன்னே
நல்லக்கைவைத்தப்படியெய்துமீளுவனுனுமது
முல்லக்கைக்காட்டியனுப்புமெனைவெளிப்பாசறைக்கே. ()

கோசிகமத்தமணிகூறையிட்டெதிர்கூடலர்தம்
பாசறையிட்டரகுநாதசேதுபதிவரைவா
யாசிரிபத்தின்முன்கூவிளங்காட்டியருளியநீர்
மாசில்கருவிளமுங்காட்டிற்காரிகைவாசிப்பனே. (கசுக)

கார்நிரையத்தைத்துரத்தியெடுத்ததன்கைவரையாற்
பார்நிரைகாத்தரகுநாதசேதுபதிவரைவாய்
நேர்நேர்நிரைநேர்நிரைநிரைமூன்றையுநீக்கிப்பின்னு
நேர்நிரையொன்றையுங்காட்டியவாறென்னநேரிழையே. ()

வல்லியத்தானையிலொன்னலர்கெட்டுப்பின்வாங்கவடு
பல்லியத்தானரகுநாதசேதுபதிவரைவாய்ச்
சொல்லியத்தானையழைக்குமுன்மாமிதொடருதல்போ
லெல்லியத்தானையசையாமலேதுக்கெறிகயிறே. (கசுங)

சித்தியைக்கண்டமொன்பானிற்செய்வோருநற்சேதுவிற்செ
பத்தியைக்கண்டரகுநாதசேதுபதிவரைவாய் [ய்
நத்தியைக்கண்டமணிகோகனகம்பொன்னுடுமணி
யத்தியைக்கண்டனமாவுங்கண்டாலரியாகுவமே. (கசுச)

முத்தமரகதமாணிக்கஞ்சொன்னமுடிநிருபர்
நித்தமெதிர்பெய்ரகுநாதன்மால்வரைநேரிழையீ
ருத்தமராயினர்சாணூர்சண்டாளருயர்மகுட
வத்தனர்தாழ்ந்தனர்பாருங்கலியுகவஞ்சனையே. (கசுரு)

காலாவுலகையளவிட்டமாலெனக்கைவளர்செங்
கோலாலளவிட்டமால்ரகுநாதன்குவட்டனமே
மேலாம்வருணத்தர்மாலைமுன்காட்டிவிதிப்படிப்பின்
னுலாம்வருணத்தர்மாலையுங்காட்டுதனல்வழக்கே. (கசுசா)

திக்கசமாமைமகமேரெனத்திரிசேடன்மகிழ்
மிக்கவளர்புகழ்வேள்ரகுநாதன்மைவெற்பணங்கே
கைக்களச்சாதிரன்னெய்தலைக்கொண்டதுகண்டிடையர்
தக்கதென்றக்கணமேபாற்குடங்களைத்தாங்கினரே. (கசுஎ)

வென்றேந்தினமிகவென்றிறுமாந்தமர்வேந்தர்நிரு
பன்றேந்திகழ்மெய்ரகுநாதசேதுபதிவரைவாய்
வன்றேந்திசையிசையுஞ்சொலல்லீரண்டர்வாழ்த்தவுயர்
குன்றேந்திமாலெனமேலொளித்திருயர்கோக்களையே. ()

வனசம்பழனம்வளர்செம்பிநாடன்மலிசெல்வத்துட்
பனசம்பழனம்ரகுநாதசேதுபதிவரைவாய்க்
கனசம்பழனம்புயர்கோப்பொருளிடங்கண்டுகொண்டோ
மனசம்பழனம்பனதாளிடமுமறிவதென்றே. (கசுசு)

சொற்புதனுங்கல்வியிலென்றநுதினந்தோறுமன்னி
யற்புதமன்னர்பணிரகுநாதனணிவரைவாய்க்
கற்புதருநகையீர்நிலையாமைமுன்காட்டவந்த
புற்புதநிற்கநிலையாமுநீரெங்குப்போகியதே. (உ00)

சேதுவையாளலர்மாதிருநால்வளர்சேதுவையாண்
மாதளவாய்ரகுநாதகிரீடிவரைவருமுற்
பாதமின்னேதண்டுலம்வாங்கச்சொற்சுயம்பாகியென்றே
யோதனங்காட்டியநீகமுநீரைபொளித்ததென்னே. (உ0க)

நாகரமுந்துதமிழோரின்மைக்கங்குனையச்செய்தி
வாகரமைந்துமிகுரகுநாதன்வரைமினன்னீர்
சாகரமுந்தியடைத்திரிலங்கைமன்சந்தமணிச்
சேகரமுந்தகர்த்தானுமையேரவிசேயென்பரே. (உ0உ)

மானிலமெங்குமந்தாநிலந்தங்கமகிழ்செம்பியர்
கோனிலம்பாட்டைத்தெறுரகுநாதன்குவட்டணங்கே
கானிலங்கார்கடவூர்கண்டநாமக்கலையர்க்கண்டாற்
றேனிலங்கார்திருத்தொண்டத்தொகையுந்தெரிந்தவரே. ()

ஆவசியம்பொன்னையூர்வசியூர்ப்பெயரார்க்கருளிப்
பாவசியங்கொள்ரகுநாதசேதுபதிவரைவாய்ப்
பூவசியஞ்செய்தனவசியந்தரப்பூண்டதுபோற்
கோவசியந்தரப்பூண்டதெப்போதுசொற்கோகிலமே. ()

பிங்களத்தால்வந்தடைந்தோர்குடும்பப்பிரதிட்டைசெய்யக்
கங்கணங்கட்டுசெங்கைரகுநாதன்கவின்வரைவாய்
மங்கைநல்லீருங்கள்ரத்நாகரத்தைமறைத்துவரச்
சங்கடங்காட்டத்தகுமோவிரப்பவர்தங்களுக்கே. (உ0ரு)

தோமினியார்செயினுஞ்சிரஞ்சேதிக்கத்தோன்றுமுனை
மாமினினீள்வடிவாள்ரகுநாதன்வரைமடவீர்
தேமினிதாமெய்யமலைப்போற்றித்திவாமுன்முறை
யாமினியேவனநீலியைப்போற்றுதும்யாமினியே. (உ0சு)

மகமிலைமேவவளர்செம்பிநாட்டிறைவாகுவென்று
நகமிலைவீரரணகேசரிரகுநாதன்வெற்பிற்
சகமிலையஞ்செயமேலாயுயர்ந்ததனம்படைத்தா
சுகமிலையென்றுசொல்வாரோவுலகிற்சுடர்த்தொடியே. ()

வேற்சேரலர்மச்சர்கொங்கர்வங்காளர்விறற்சமுகப்
பாற்சேரபயரகுநாதசேதுபதிவரைவாய்
நூற்சேரவையினுநூற்றிலொன்றானநுசுப்புடையீர்
கூற்சேரளித்தரைக்காற்சேர்கொடாததுகைதவமே. ()

குலத்தைத்தந்தேவர்கொளச்செம்பிநாட்டுக்குடிகளுக்கு
நலத்தைத்தந்தாளுமனுரகுநாதன்மைந்நாகத்திற்சை
வலத்தைத்தந்தார்குழலீர்முன்பதக்கவலமென்றுள்ள
கலத்தைத்தந்திரிருதூணியுந்தாருங்கணைக்குடனே. (உ0கூ)

கருக்குஞ்சிலீமுகமன்சொலிநட்பைமுன்காத்திகலை
நருக்குஞ்சிலீமுகமன்னப்பொருரகுநாதன்வெற்பிற்
பருக்குஞ்சிலீமுகங்காட்டியநீமறைபாணிக்குளே
யிருக்குஞ்சிலீமுகங்காட்டாதிருப்பதென்னேந்திழையே. ()

வேந்தாதிவேந்தர்பரவுஞ்சமூகவிசயன்மனு
மாந்தாதிகள்புகழ்வேள்ரகுநாதன்வரைமடவீர்
காந்தாரியாய்த்துரியோதனமால்பெற்றுக்காட்டியவற்
காந்தாதையைமுன்னமேகாட்டியதிங்கதிசயமே. (உகக)

முன்னரியைச்சிலையாகச்செய்தோன்வெட்கமுன்கிலையைப்
பின்னரியாகச்செயும்ரகுநாதப்பிரபலன்வரைப்
பொன்னேதினநற்கரும்பைத்தராமற்புழுகிலகு
பன்னுடைமூடுகுரும்பைதந்தாயென்னபாக்கியமே. (உகஉ)

வஞ்சனையாகவருங்கொடியோர்கண்மணியிழக்க
வெஞ்சரமேவுசெயரகுநாதன்வியன்சிலம்பிற்
கஞ்சமலர்மனைவிட்டுமுன்னனகனியளிய
நஞ்சதிடாமற்செந்தேங்காயையேதுக்குநல்கியதே. (உகங)

சாரதத்தில்வேள்கல்வியிற்போசன்றந்திற்றுவரையர்கோன்
சாரதத்தில்ராமனெனும்ரகுநாதன்சயிலமின்னே
பாரதத்திலாவதறிந்தோஞ்சிவநிசிப்பத்தர்புரி
விரதத்திலாவதுநீயேயறிவிக்கவேண்டியதே. (உகச)

கலையைமுன் காட்டுமெதிபோற்றவளக்கவிகைநிழ
னிலையைமுன் காட்டும்ரகுநாதன் மால்வரைநேரிழையீர்
மலையைமுன் காட்டியடைத்தீர்கடலைநன் மந்திரத்தா
லலையைமுன் காட்டியதுபோலக்காட்டுமெனையின் றியே. ()

தங்காவியன்னவிறைசெய்பிராடன்சரணடைந்தோர்
பங்காவியன்னரகுநாதசேதுபதிவிருதாஞ்
செங்காவியன்னமணிதானைசேர்கசச்சேவகமுன்
கொங்காவியன்னகுழலீரதுவுங்கொடுக்கினன்றே. (உகரு)

கிடைக்குங்கிடைக்குங்கிளர்செம்பிநாடன்கெடிப்பயந்தன்
படைக்கும்படைக்கும்ரகுநாதசேதுபதிவரையீர்
புடைக்கும்புடைக்குந்துரைத்தனநீர்தரப்பூரித்தநான்
கடைக்குங்கடைக்குமமைச்சரையுந்தரிற்கைக்கொள்வனே.

ஞானந்தந்திரமலிநதிச்செம்பியர்தோன்றலிசைக்
கானந்தந்திரஞ்செவிரகுநாதன்கவின்வரைவாய்
வானந்தந்தீரெனநுண்ணிடையீர்நன்மணிக்கனகத்
தானந்தந்தீரினங்கோதானமுந்தரிற்றுனமெய்யே. (உகஅ)

பொன்னிக்குப்பொன்னித்திலமணியீதன்புனற்செம்பியாள்
சென்னிக்குச்சென்னியெனும்ரகுநாதனற்றேவையன்னீர்
வன்னிக்குமுன்றனமீந்தீர்சொற்காவியம்வாசிக்கநீ
ருன்னிக்கவிஞரெனக்காட்டிற்கூடற்குடையவரே. (உகசு)

நடமுந்திசையெனப்பொற்சதங்கைத்தொனிநல்கமுன்ச
கடமுந்துபங்கசத்தான்ரகுநாதன்கவின்வரைவாய்
வடமொழிதென்மொழியாஞ்சூதமாமுன்பின்மார்க்கப்படித்
திடமுன்புகண்டனம்பின்னென் றுங்காணட்டுஞ்சேயிழையே.

கித்தியமாண்மையவுதாரியநன்மைகீர்த்தியைந்து
நித்தியமாகும்ரகுநாதன்மால்வரைநேரிழையீர்
சத்தியமில்லைபளியில்லைமெய்யுண்மைசாட்சியில்லை
யத்தியும்வம்புமுடையீருமக்கிங்கரசில்லையே. (உஉக)

நொடைக்கஞ்சியமுகிலார்பொழிற்செம்பியர்கோமதலைத்
தொடைக்கஞ்சியமெய்ரகுநாதன்மால்வரைத்தோகையுன்ற
னடைக்கஞ்சியபிடிகுத்துணப்பார்த்தனநாடட்டுமே
லிடைக்கஞ்சியதுடிகட்டுண்டடிபட்டிருப்பதுமே. (உஉஉ)

சத்துருமித்துருவித்துருமம்பொற்றரளமிட்டு
நத்துருநத்துருவத்துருவன்ரகுநாதன்வெற்பின்
பத்துருவைத்தரிசித்தோமுன்னுழிமதித்தவன்செய்
பத்துருவத்திலொன்றெப்போதுகாண்பதுபைந்தொடியே.()

மன்னுமரக்கனைமுன்னாளைப்போரின்மகுடபங்கந்
தன்னுண்மையாற்செய்தமால்ரகுநாதன்சயிலமின்னே
கொன்னுர்கலிங்கவங்கம்மலையாளக்குடகுதந்தாய்
பின்னுடனிமச்சதேசமுமீயிற்பெருமையுண்டே. (உஉச)

கலமலிவேலையலையலைவீறுசங்கத்துறைசேர்
தலமிகுதேவைத்துறைரகுநாததன தன்வெற்பி
னலவனசத்திருவன்னீரும்மாலிங்குநாடொறுமுற்
பலமிலைமெத்தசலமுண்டிதென்னசம்பாவனையே. (உஉரு)

நரியாடுமொன்முசலான்போற்பகையஞ்சநாடுகுய
வரியாடவர்திலகன்ரகுநாதன்வரையணங்கே
யரியாடுகூத்துமுன்காட்டியநீயினியம்புலிச்சோ
தரியாடுகூத்தையுங்காட்டினுண்டாம்வெகுதன்மங்களே. ()

ஓதண்டர்நாட்டிற்குடிவாங்கப்பந்தரொடுமெணக்கான்
மீதண்டநாட்டப்புரிரகுநாதனல்வெற்பணங்கே
கோதண்டங்குந்தமுன்னீந்துபின்மாமகுடமுங்கட
வேதண்டமுந்தரினனங்கதேசத்தைவெல்குவனே. (உஉஎ)

டீ தண்டகாரண்ணியவாசிகண்முன்னிகல்வாய்க்கிலென்வில்
காதண்டுமென்றருள்செய்ரகுநாதன்கவின்வரைவாய்க்
கோதண்டக்குந்தகமின்மைமெய்யாகிற்குடமலைத
லேதண்டராகவமோதலங்காரவிளங்கொடியே. (உஉஅ)

புடவிகடந்தமிளவற்குமெய்த்தவம்பூண்டுமுன்னே
யடவிகடந்தபநரகுநாதனசலமின்னே
குடவிகடந்தரல்காட்டிக்கலையைக்கைக்கொண்டொளித்த
கடவிகடந்தரலானுனையுஞ்சொல்வர்கண்ணனென்றே. ()

பூணனைதந்தைதனைநீங்கியானந்தம்பூணக்கஞ்ச
ஞணமுன்னுகவருரகுநாதன்மைந்நாகமின்னே
பாணனையோடியொளிக்கவென்ருயங்கபந்தனையுங்
காணவென்ருனுனையேதிருமாலென்பர்கண்டவரே. (உ௩0)

செற்கோலவெம்பகுவாய்த்தாடகைபுத்திரர்களிரா
மற்கோனுதவுதனுரகுநாதன்வரைமடவீர்
சொற்கோலிலம்பையங்கோட்டூர்தற்கோலந்தொழுதந்திரு
விற்கோலமுந்திருவேற்காடுமேற்றெழவேண்டியதே. ()

குருவார்த்தைமேற்கொண்டடர்பிசிதாசநர்கோனைவென்று
பெருமகங்காத்தவீரரகுநாதன்பிறங்கன்மின்னே
திருநீலகண்டரைவன்னத்துடன்முன்றிலையிற்கண்டோங்
கரைதிருக்காளத்திவேடரைப்போரொடுங்காண்குதுமே. ()

வீடணனுற்சொலிலங்கைச்சுவேலைக்கும்வேலைக்குமேன்
மாடணைசெய்யச்செயும்ரகுநாதன்வரைமடவீர்
கூடலிறைரத்தினம்பகர்ந்தாமகுடஞ்செய்வினை
யாடல்கண்டோம்வலைவீசாடலுங்கண்டறிகுவமே. (உ௩௩)

தருவானகந்தொடுசெம்பியிற்றேவைத்தலத்தளவா
யுருவாகியமனுவாம்ரகுநாதன்வெற்பொண்டொடியீர்
திருவானைக்காவுஞ்சிரகிரியுந்தெரிசித்துவந்தோங்
கருவூர்திரியம்பகம்விருப்பாட்சியுங்காண்குதுமே. (உ௩௪)

காராமிதிதருசிந்தாமணிசுவர்க்கத்துடனிப்
பாராளுமிந்திரரகுநாதசேதுபதிவரைவாய்
வாரானையம்புலினுங்கஞ்சப்பாணிமணிவடமுந்
நீராடல்காப்புறுவோஞ்சொற்செய்வீரையெந்நேரிழையே.

கங்கையிலேவிடுமோடத்தலைவன்களித்துத்தொழ
நங்களுக்கோர்துணைநீயென்றருள்ரகுநாதன்வரை
மங்கைநல்லீர்தமையன்றம்பியாமுறைமார்க்கப்படி
யங்குசம்போற்றரிசிக்கட்டுநாமவரயிலையே. (உ௩௬)

துரந்தரராசபுரந்தரனனதுரையுலகு
புரந்தவைபோகரகுநாதன்மால்வரைப்பொன்னனையீர்
கரந்தொழுவேங்கடங்காட்டியநீரினங்காட்டுமணி
யரங்கனையாழிதரனைமுகுந்தனையப்பனையே. (உ௩௭)

கனமானநீர்யௌவனமோகையீகைபொன்கல்விமெய்விற்
பனமாண்மைமீறுரகுநாதசேதுபதிவரைவாய்த்
தனரேகைகாட்டிமெய்லட்சணமுஞ்சொன்னசாத்திரமெய்
யினமானன்மச்சமுங்காட்டியுரைக்கிலிளங்கொடியே. ()

வெப்பளித்தாவமுறைபுங்கமெய்திகல்வேட்டிரத்தங்
கொப்பளித்தாகவஞ்செய்ரகுநாதகுபேரன்வரை
யொப்பளித்தாவதில்லாவஞ்சனமணியுண்மையிலாச்
செப்பளித்தாவதெனப்பிரயோசனந்தேமொழியே. (உ௩௯)

காலையிலாமலெக்காலையிலுஞ்செய்கடுங்கொலைவை
வேலையிலார்தருகோரகுநாதன்வியன்சிலம்பி
னாலையிலாமற்செயுமிடையீர்முன்புறாதனமாஞ்
சேலையிலாமற்றருவதுண்டோவெறுஞ்சீதனமே. (உ௪0)

நாலாம்பனுவனவரசச்சொற்றமிழ்நாவலர்க்கு
மேலாம்பரிசருண்மால்ரகுநாதவிதூரன்வெற்பிற்
பாலாஞ்சுயோதனமாருதிச்சண்டைமுன்பார்க்கநடு
நீலாம்பரனில்லையேயுரைப்பாரெவர்நேரிழையே. (உ௪௧)

சேலனமேதிசொரிசுதையுண்பணைச்செம்பியன்செங்
கோலனபாயன்ரகுநாதன்மால்வரைகொண்டவரைப்
பாலனமென்மொழியீர்முன்குசனைப்பணிந்ததுபோ
னீலனையுந்தொழுதாலெய்தலாஞ்செல்வநேத்தியதே. (உ௪உ)

தம்பதமாதியிறக்கநம்பாததரியலர்க
ணம்பதசேடரதிராகச்செய்ரகுநாதன்வெற்பிற்
கம்பதனமிடற்றீர்முனமாலெனக்காட்டியிகற்
கும்பதனங்கண்டொளிப்பதென்னுந்தகங்கோவலரே (உ௪௩)

வந்தனமாகத்தொழுவார்க்குமந்திரம்வாய்த்ததிக்கு
பந்தனமாகும்ரகுநாதசேதுபதிவரைவா
யிந்தனவத்திரத்தீர்கலியாணமிசையிலிகு
சந்தனமுன்கொடுத்தீர்கொடுப்பீரட்சதையினியே. (உ௪௪)

துருப்பதனைக்கொணர்ந்தன்றெதிர்விட்டுத்துரோணரெனு
குருப்பதமேத்துமனுரகுநாதகுமுணன்வெற்பிற் [ங்
கருப்பதனல்லுருவீர்முதனுமல்லிகார்ச்சுனபாம்
பருப்பதமேத்தினமாடுதுமேற்றுங்கபத்திரியே. (உசரு)

மித்திரபுத்திரனீகைக்குவாகைக்குமேவுபல
பத்திரனன்னரகுநாதசேதுபதிவரைவாய்ச்
சித்திரமென்மொழியீர்காமக்கோடைதெறுவெயிற்குச்
சத்திரமுன்கொடுப்பின்கொடுநீர்க்குடந்தாகத்திற்கே. ()

நடமிருந்தென்னவனஞ்சூழ்தென்றேவைத்தனிலெண்டிரு
நடமிருந்தென்னமுரசொலிசெய்ரகுநாதன்வெற்பிற்
படமிருந்தென்னவரையிர்மருந்துடன்பண்டிதவா
கடமிருந்தென்னமுன்சத்திரமிட்டபின்காண்குவமே (உசஎ)

அயனங்களித்தவிருதிணைநாற்கதியாமுயிர்க்கெண்
பபனங்களித்தரகுநாதசேதுபதிவரைவாய்க்
கபனங்களுநேர்ந்தனமென்றுரைத்தென்னகாட்டியென்ன
நயனங்களுர்க்களித்தாற்பயிர்செய்குவநன்னுதலே. (உசஅ)

உடலையுடலையுளமாதவரினுறுநரொடு
நடலைநடலையிலாமற்புரிரகுநாதன்வெற்பின்
மடலைமடலைவசியர்க்குஞ்செய்புமடவரலே
விடலைவிடலையிலாத்தனமேதுவெளிப்பட்டதே. (உசகூ)

சித்திரையாவணிமுன்போனடுங்கச்செறுநர்வெலும்
பத்திரையன்னரகுநாதசேதுபதிவரைவா
முத்திரையன்னமடவீர்பணப்பையுடையர்வைச்ச
முத்திரையில்லையெனிலாந்தனத்துக்குமோசங்களே. (உரு௦)

அடலையுடையகிட்கிந்தையர்கோனையடித்தசர
விடலையெனுமெய்ரகுநாதன்மால்வரைமெல்லியலா
யிடலைவிடுமணிக்குந்தனமேனெளியேங்களுக்குக்
கடலையவனுடனீந்தாலும்போம்பலன்கைகண்டதே.(௨௫௧)

அருணனையுந்துமணிபெயிற்றேவைக்கரசன்கொடைத்
தருணனையாதருண்மால்ரகுநாதன்சயிலமன்னீர்
வருணனைமுன்புகடிந்திரணிபணிவார்மொய்க்கும்ப
கருணனையுந்தெறினீர்பிசங்கோதண்டங்கைக்கொண்டதே.

முல்லைபலங்கலின்மின்னார்கண்வண்டினமொய்க்கவவாச்
செல்லுமிவுளித்துரைரகுநாதன்சிலம்பனையீர்
கொல்லமுன்னாசுக்குபவரிவந்துகுதிக்கக்கண்டும்
பல்லையமெங்கொளித்திருங்கள்சேவகம்பாழ்த்ததுவே. ()

நிற்கடங்காக்கொடியாலவட்டம்படைநேரலர்கோ
விற்கடங்காணத்தெறுரகுநாதனல்வெற்பனையீர்
சொற்கடங்காதபுகழ்முகராமனிற்றோன்றியநீர்
மற்கடங்காண்பித்துத்தாவாமுன்வேலைமறைத்ததென்னே.

முனம்படைத்தீரரெனவந்தநேரலர்மூடரைப்போல்
வனம்படைத்தோடவிடுரகுநாதன்வரைமடவீர்
தனம்படைத்திரண்டூர்படைத்திரென்னதாட்சியுண்ண
வனம்படைத்திரில்லைசத்திரமேதுக்கடைத்ததுவே. (௨௫௫)

கொள்ளமறையவர்க்கெண்ணிருதானங்கொடுத்தனமச்சர்
விள்ளமறைகொளுளரகுநாதன்வியன்சிலம்பிற்
புள்ளமறையிதெனுங்குழலீர்முன்புகல்கணக்கு
வெள்ளமறையவுடனேபதுமம்வெளிப்பட்டதே. (௨௫௬)

குத்திபல்லாரிபுனாடில்லியுச்சினிகோலகொண்டை
சித்திரக்கன்முதல்வெல்ரகுநாதன்சிலோச்சயவா
யத்திரியைத்தரிசித்தோஞ்சரபங்கனாச்சிரமச்
சித்திபெற்றாலினிநாமேயிராமனுஞ்சீதையுமே. (உருஎ)

கதக்குஞ்சரக்கரினத்தைச்சினத்துக்கடித்துணவாய்
குதக்குஞ்சரக்குமுனான்ரகுநாதன்குலவரைவாய்
மதக்குஞ்சரக்குழலீர்தனபாரமதிப்பறிந்தோ
மிதக்குஞ்சரக்குப்பைகாட்டிமுன்கொண்டவிலைசொல்லுமே.

இடக்குமுறைசெய்கொடுங்கோலரசரினத்தைவெட்டி
யடக்குமுறைவடிவாள்ரகுநாதனணிவரைவாய்க்
குடக்குவடக்குறிந்தோமதன்விற்குணக்குத்தக்கண
நடக்குமிடமினியாமறியோமிங்ஙனன்னுதலே. (உருகூ)

திசையம்படிக்கவளர்செம்பிநாடன்மெய்த்தேவையர்கோ
னசையம்படிக்கவரும்ரகுநாதனன்னாட்டிலுயர்ந்
தசையம்படிக்கவுங்காவேரிகாணவுந்தவங்கள்
விசையம்படிக்கவிடுங்கல்விஞான்கொள்ளமெல்லியரே (உசo)

போரணவாசிநடத்தியமாத்திரைபுத்திரன்மெய்
யோரணவாசிமுனரகுநாதன்வெற்பொண்டொடியீர்
வாரணவாசிமுன்கண்டுவந்தோநல்வாரிதிசேர்
காரணவாசிமணிகோகனமென்றுகாண்பதுவே. (உசக)

படியிட்டமாகப்புரந்தடங்காதபகைவென்ற
வடியிட்டவேற்கைரகுநாததீரன்மணிவரைவாய்த்
தொடியிட்டசெங்கையிளம்பிடிநீநயந்தோன்றவுடம்
பிடியிட்டபோதல்லவோநிசமாமுன்பிடியிட்டதே. (உசஉ)

குனிக்குமுன்னே சிலையொன்னலர்வாய்ச்சொல்குளறவுமெய்
பனிக்கும்வெங்கண்டரகுநாதமேசதுபதிவரைவாய்ச்
சனிக்குமுன்னே திருவாரூர்க்கமலத்தடத்தைக்கண்டோ
மினிக்கண்டுபோற்றுதுமம்பலவாணன்மன்றேந்திழையே ()

துணிவார்க்குமாபலிபாற்றுனமேற்றிடத்தோயத்தைமுன்
னணிவார்க்குமாபுரிதேவைத்துறைரகுநாதன்வெற்பிற்
பணிவார்க்குச்சொர்க்கமளித்தாயினியப்பரமபதந்
தணிவார்க்குநீதரிலுண்டாமகிமைதளிரியலே. (உசுச)

சுகராலயத்தையற்றோர்பணிதேவைதொழுமன்னர்சூழ்
நகராலயத்தைரகுநாதனுகமுன்னுட்டந்தே
சிகராலயத்தைமுன்காணப்பெற்றேம்வசுதேவர்தந்த
மகராலயத்தைபுங்காணிலுண்டாங்கதிவாணுதலே. (உசுரு)

ஓகையையூகையுடனேகொண்டாதுலர்க்கோய்வதின்றி
யீகையையீகைபுரிரகுநாதன்வெற்பேந்திழையீர்
வாகையைக்காட்டியதுபோலிப்போதுங்கண்மன்னவன்ப
தாகையைக்காண்பிக்கினீரேயவற்குத்தளகர்த்தரே. (உசுசு)

நூதனமாகத்தருவிற்கனகன்னூற்கவிக்குச்
சீதனமாகத்தருரகுநாதனற்றேவையன்னீர்
மாதனநாகமுன்காணவென்றுக்கிரவழுதியைப்போற்
கேதனங்காட்டப்பயந்தாலுமக்கபகீர்த்திகளே. (உசுஎ)

நெருப்புஞ்சதாகதியுங்கலந்தாலெனநேரலர்மேற்
றிருப்புஞ்சமர்வடிவேல்ரகுநாதனற்றேவையன்னீர்
கருப்புங்கலசமுமையம்புகலுநல்காதுநற்பால்
பருப்புந்தனம்பணியாரமளித்ததென்பாக்கியமே. (உசுஅ)

காலைத்தந்தத்தியையா றிடுமோப்படைக்காவலன்செங்
கோலைத்தந்தத்தியைச்செய்ரகுநாதகுமுணன்வரைப்
பாலைத்தந்தத்தியைவாய்மடவீர்முன்பரமனைப்போற்
றேலைத்தந்தத்தியையெங்கொளித்தீர்தரிற்றேற்றுவனே. ()

மாட்டாங்குளப்படிபோலொன்னலர்படைவாரிகடந்
திட்டாங்குளத்தினிதிரகுநாதன்வெற்பேந்திழையீர்
நாட்டாங்குளமலையாங்குளங்கண்டனநாமினிமேற்
காட்டாங்குளத்தையுங்காண்பதெப்போதுகழறுகவே. ()

அடம்பிடிக்கைதைவளர்செம்பிநாட்டிலரசுநன்மை
யிடம்பிடிக்கைதரச்செய்ரகுநாதன்வெற்பேந்திழையீர்
கடம்பிடிக்கைதைவருமுங்களூர்ப்பயிர்காணக்குடி
யுடம்பிடிக்கைதருமுன்வாரகந்தந்ததுத்தமமே. (உஎக)

தடம்பணிலஞ்செறியுஞ்செம்பிநாட்டிற்றரியலருய்
யிடம்பணிகேட்டுத்தொழுரகுநாதன்மெய்யேமவெற்பிற்
கடம்பணியாங்குகுடமுன்கண்டோமயில்கானிலன்றே
றிடம்பணிவோமயில்வாகனனென்றுனைத்தேமொழியே. ()

ஊனைமுன்காட்டுப்புறவினுக்காகவுதவுமனுக்
கோனைமுன்காட்டத்தகுரகுநாதகுபேரன்வரை
யானையின்மேல்வைத்துக்கோலமுன்காட்டியருளிவட
மீனையுங்காட்டிலன்றேகலியாணமெய்மெல்லியலே. (உஎ௩)

நாலார்கவிப்படையேலாருயிர்கொணமனெனவே
வேலார்கரதலமால்ரகுநாதன்விலங்கன்மின்னே
மாலார்திருக்கச்சியத்திகிரிகண்டுவோழ்ந்தவரைம்
பாலாறுசேர்திருப்பாற்கடல்கண்டுபணிதனன்றே. (உஎச)

வெருவிடங்தைக்கோலலட்சியமாகக்கைவேல்கொண்டிக
லுருவிடங்தைக்கப்பொருரகுநாதன்வெற்பொண்டொடியீர்
மருவிடங்தைப்பணியீர்திருநீர்மலைமாலைக்கண்டோர்
திருவிடங்தைக்குமயிலைக்கும்போவர்தெரிசிக்கவே. (உஎரு)

தரைக்குத்தரையெனவாழ்செம்பித்தேவைத்தலத்தர்மகிழ்
துரைக்குத்துரைரகுநாதன்சிலோச்சயத்தோகையன்னீர்
வரைக்குவரையுளதென்றுமுன்காட்டிவரினுமவை
திரைக்குத்திரையிடுவாரோவுலகிற்றெரிந்தவரே. (உஎசு)

மஞ்சளையிஞ்சிதளிவளர்செய்யொடுமெஞ்சளிஞ்சி
விஞ்சுமெய்த்தேவைத்துரைரகுநாதன்விலங்கன்மின்னே
துஞ்சுமுனைமுசுகுந்தனிலாமற்றுரத்தியுநீ
கஞ்சனையுந்தொலைத்தாற்றெழுவாருனைக்கண்ணனென்றே.

கேட்டந்தமன்னரிசைவீரமாண்மைகிளர்புகழ்பூண்
சூட்டந்தமாமெய்ரகுநாதன்றேவைச்சுடர்க்கிரிவாய்க்
காட்டந்தமாஞ்சொற்கடைமருந்தீர்பெருங்காயமென்று
கோட்டந்தந்தீர்கடுக்காய்ப்பூவுநீர்தரக்கோருவனே. (உஎஅ)

குச்சிலையெய்தப்பெறுதவரேனுந்தற்கோரிவந்தான்
மச்சிலையெய்தச்செயும்ரகுநாதன்வரைமடவீர்
நச்சிலையென்பதறிந்தோறும்பாலினிநாங்களுய்யக்
கச்சிலையென்பதுஞ்செய்தால்வெகுநன்மைகாணுமக்கே. ()

அஞ்சையிலேவெருவேலென்றெளியரையாதரிக்கு
மஞ்சையிலேசெனச்செய்ரகுநாதமகிபன்வரைப்
புஞ்சையிலேதுவரையென்றுகாட்டியிப்போதழகா
நஞ்சையிலேயெனலாமோபெண்ணேபொன்னிநாட்டினிதே

சந்தனுபோசனளன்மாதவனரிச்சந்திரன்போல்
வந்தனுமானமறாரகுநாதன்வரைமடவீ
ரெந்தனுவெய்தமறிமாவிரண்டதிலக்குத்தப்பி [றே.
வந்ததிலொன்றைமறைத்தொன்றைக்காட்டனன்மார்க்கமன்

தாகமிருந்தவறியோர்க்கமுதந்தருதலிற்றி
யாகமிருந்தகரரகுநாதனணிவரைவாய்
மாகமிருந்தநடுவீர்துரோணவருபதும
யூகமிருந்துஞ்சயினியமோடியொளித்ததென்னே. (உஅஉ)

வீரான்போர்க்குவெருவிமுன்சந்திவிடினுமொப்பாத்
தீரரணமதமாரகுநாதன்சிலம்பனையீர்
நீரரன்கைக்கொண்டுவெற்பரணைத்தள்ளனீதியன்று
பாரரணம்மிலையுங்களரமனைப்பாழென்பரே. (உஅங)

வாட்டானைகொண்டகடற்றானைமண்டவருமகத
நாட்டானைவென்றசெயரகுநாதநரேந்திரன்வரைக்
காட்டானைவென்றகட்டீர்கிள்ளையேந்திமுன்காணுமயிற்
கோட்டானைவென்றகரும்பிளையாதுரங்கோகிலமே. (உஅச)

கூட்டிடநட்பைப்பிரிக்கப்பிரித்ததைக்கூட்டிப்பின்னு
மீட்டிடச்செய்தந்திரரகுநாதன்விலங்கலன்னீர் [ன்
நாட்டிடைச்செட்டியுரத்தைமுன்காண்பித்துநஞ்சத்தைப்பி
காட்டிடவோமறைத்திருங்கள்வாணிபங்கைகண்டதே. ()

கிள்ளைமறைசொலக்கோகிலங்கேட்டுக்கிளர்பொழில்சூழ்
வள்ளைவயற்செம்பியாள்ரகுநாதன்வரைமடவீர்
பிள்ளைமுன்பெண்டந்தானங்கண்டோமந்தப்பிள்ளைசைவங்
கொள்ளையிடச்சமணோடிட்டதுங்கண்டுகொள்வதென்றே: ()

கலையிருந்தாலுமுளத்திற்றருமங்கழறுமனு
நிலையிருந்தாலமகிழ்ரகுநாதகிருபன்வெற்பிற்
சிலையிருந்தாவதென்னேகட்டியப்பரைச்சேர்க்கமுன்னே
யலையிருந்தாலல்லவோசொல்லுவாயினியங்கனையே. ()

நாதகமம்புகதையிட்டிமாரதநாகமன்செய்
சாதகமன்னுமுரரகுநாததயாளன்வெற்பிற்
பேதகமின்னற்பெருந்துறைகாட்டியபின்னலவோ
போதகங்காட்டத்தகுமடியார்கட்குப்பூங்கொடியே (உஅஅ)

வான்சிந்திப்பூநிகரில்லாக்கைம்மாறுடைவள்ளல்செம்பிக்
கோன்சிந்திப்பாவலர்சொல்ரகுநாதன்குவடனையீர் [தா
தேன்சிந்திப்போமென்றளித்தீர்முன்பானையத்தேனைத்தந்
ஞன்சிந்திப்போமென்றுந்தித்திக்கக்கொண்டுங்கணுமத்தை

கட்டணக்கோட்டைநிதியொடுமன்னர்தங்கைகுவித்துக் [யே
கொட்டணக்கோட்டைவிடுரகுநாதகுபேரன்வரை
யுட்டணக்கோட்டைநிகர்களத்தீர்தருமுங்கள்பெரும் [மே.
பட்டணக்கோட்டையைப்போற்சந்தைப்பேட்டையைப்பார்க்கட்டு

குஞ்சத்தைவெள்ளைக்குடையைத்தமிழ்க்குக்குலவுசப்பிர
மஞ்சத்தையீயுங்கொடைரகுநாதமகிபனல
வஞ்சத்தைவென்னடைமானேமுன்பந்தரைபாதரித்த [யே,
கஞ்சத்தைச்சேர்ந்தனன்சேர்வதெப்போதுவங்காளத்தை

விண்புவிபூடணமாடைபொன்னுடைவிபவமென்று
நண்புவிபீடணர்செய்ரகுநாதநரேந்திரன்வெற்பிற்
பண்புவிபூதியனையீரிருகொங்கைபாலித்தநீ
ருண்புவிபூசனையாற்கொள்ளுவாரையுதவலையே. (உகூஉ)

பம்புவியாகரணங்கலைஞானங்கொள்பண்டிதரா
னம்புவியாழமெனும்ரகுநாதன்மைந்நாகமின்னே
கொம்புவியாசர்கதையெழுதேடுகொடுத்ததுமெய்
யம்புவியாளவரமுந்தந்தார்கலியாணமெய்யே. (உகூங)

உருமானையிட்டிகவேதாவிபவத்துருப்பசிக்கோ
தருமானையிட்டவிரல்ரகுநாதன்றடவரைவாய்
வருமானமென்குழலீர்செய்குவார்கைவரினுமெய்யாக்
கருமானையின்றியமையாதுகான்கும்பகாரனுக்கே. (உகூச)

கங்கையைக்கண்டவர்கங்கையைக்கண்டெசருதும்வர்
சங்கையைக்கண்டனைசெய்ரகுநாதன்சயிலவரை
யிங்கையைக்கண்டசொற்றேன்வஞ்சிகூடலிறைகொல்வஞ்சி
கொங்கையைக்கண்டனன்பாணரையுங்கண்டுகொள்ளுவனே

வானங்குலவரையெங்குந்தன்சீர்த்திவளரவுமை
கோனங்குலப்பணிசெய்ரகுநாதகுமுணன்வரைத்
தானங்குலவுமினன்னீர்முன்பெற்றவர்தங்களுக்கு
மானங்குலமெய்தப்பண்ணுமுன்னேவந்தமாதங்கமே. ()

தென்னவரைவில்லவரைமனுவிற்றிருத்தியிசை
மின்னவரைபுரிரகுநாதன்விலங்கலன்னீர்
சொன்னவரையறிந்தோமுங்கள்காவியஞ்சூத்திரமா
மென்னவரையமன்றயாமலீந்திடுமெங்களுக்கே. (உகூஎ)

திரையடிக்கும்பலதீவுங்கலிப்பகைதீரவென்று
பறையடிக்கும்பொன்ரகுநாதசேதுபதிவரைவாய்க்
கரையடிக்கும்பமுனிகாட்டக்காணுந்தொல்காப்பியத்தின்
மறையடிக்கும்பன்முடிக்குமுரையொன்றுவாணுதலே. ()

சிந்துரத்தந்தளமேற்கொண்டிடப்பரசேனையைமோய்
சிந்துரத்தந்தளவேல்ரகுநாதன்சிலம்பிற்பொன்னே

சிந்துரத்தந்தச்சந்தங்கண்டனமொன்றுசேரையடிச்
சிந்துரத்தந்தமிகுகிதழுங்கண்டுதேர்வதென்றே. (உகக)

நிசிசரனன்றுமெய்யென்னும்வெங்கூற்றைநிமிடத்திற்கொல்
விசிகரமன்றெறுடுவேல்ரகுநாதன்வியன்சிலம்பில்
ருசிகரமென்றயின்மோகனதம்பனரூபமின்னே
வசிகரமென்றறிவிப்பாய்முன்பேதனம்வாய்த்தவர்க்கே. ()

மச்சுப்பெய்வீடுநிதியாமறையவர்வாழ்த்தவொரு
மிச்சுப்பெய்தானரகுநாதன்மால்வரைமின்னனையீர்
கச்சுப்பயோதரவண்ணப்பொன்மாலைமுன்காட்டியநீர்
நச்சுப்பொய்கைத்தலத்தைவரைமீட்டிடினன்மையுண்டே. ()

தனதடம்பத்திசெலுத்தலரற்கெனுந்தர்மவுள்ளத்
தனதடம்பத்திதருரகுநாதன்சயிலமன்னீர்
தனதடம்பத்திபந்தந்தீரினியஞ்சனவைவச்சு
தனதடம்பத்தியதிகாரமுந்தரத்தக்கவரே. (௩0உ)

வைப்போதகத்தைமரமாநிதிமணிமானுமெய்யி
சைப்போதகத்தைவரரகுநாதன்சயிலமன்னீர்
நைப்போதகத்தைநசுப்பீரினிதுடனூனுங்கள்பொய்
கைப்போதகத்தையுங்கைப்போதகமெனக்காணட்டுமே. ()

டாண்டுதந்தீர்வையில்லாமற்குடிகட்குப்பற்றலர்மெய்
விண்டுதந்தீர்படச்செய்ரகுநாதவிசயன்வெற்பில்
வண்டுதந்தீர்வைகியகுழலீர்கொண்டைமாலைமணச்
செண்டுதந்தீர்சரமுந்தரக்கோருமென்சிந்தனையே. (௩0ச)

வருமலைவென்றரவிபோற்பகையைமடித்துக்கொடைத்
தருமலைவெய்த்தருரகுநாதன்சயிலமன்னீர்
பொருமலையீசத்தியையொழித்திருப்புரிவலியை
யிருமலையுந்தவிர்த்தானீர்மருத்துவரெங்களுக்கே. (௩0ரு)

அல்லாரைக்குண்டலவில்லாரைமந்திரத்தாற்செய்பிரா
டெல்லாரையுந்தொடவாழ்ரகுநாதன்வெற்பேபந்திழையீர்
நல்லாரைப்போல்வருங்கல்லாரைவிட்டெந்தஞாயஞ்சொல்
மில்லாரைக்காய்கின்றவல்லாரைக்காட்டுதலெங்களுக்கே. [து

ஊடலையிருதலையுற்றோன்பழிதொடர்ந்தோடிவர
லடலையும்வென்றரகுநாதன்றேவையணிவரைவாய்
மடலைநிகர்த்தகுழலீர்நற்சர்க்கரைவட்டுத்தந்தீர்
கடலையும்விட்டுக்கலந்தாலல்லோருசிகாண்பதுவே. (௩௦௭)

வளமேவுதேவைரகுநாதனூப்பன்வரையிடத்தே
குளமேவுசெஞ்சொற்குயிலனையீர்நின்கொடுவிரக
முளமேவுகாமசுரதாகந்தீர்ந்திடவுன்னிடத்தா
ளிளநீரைத்தந்தினிக்கண்டிறவாவிடிலென்பலனே. (௩௦௮)

நிக்கங்கும்பிட்டுப்பராசர்பற்கெஞ்சிநிற்பப்பொன்னை
வைத்தங்கிருக்கும்ரகுநாதன்றேவைமணிவரைவாய்
நத்தங்கும்பிட்டகுழலீரதிசயநன்றுநன்றிங்
கத்தங்கும்பத்தைவிட்டப்பாலிராசிநட்பானதுவே. (௩௦௯)

பையாடரவம்புனைராமலிங்கர்பதம்பணியு
ம்மையானென்னுஞ்சொற்றுசரகுநாதன்மைந்நாகமன்னீர்
செய்யாததிசயஞ்செய்தீர்தனத்தைத்திறந்தளித்துக்
கையாற்கடலடைத்தீர்திருமாற்றிறங்காட்டியதே. (௩௧௦)

கோவைத்துறையொன்றிநூறுகொண்டமைக்கொண்ட
டேவைத்துரைதளவாய்ரகுநாதன்சிலம்பின்மத [லெங்க
னேவைக்கொடியையூராசைவின்ஞணையென்பால்வனசப்
பாவைக்கமுதனையீர்மறைத்தீரென்பகையென்னவே. *(௪௦௦)

---

* இடையிலுள்ள 89-செய்யுட்களகப்படவில்லை—பதிப்பாசிரியர்.

செய்யுண் முதற்குறிப் பகராதி.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
20	24	மூதுணர்தோர்	மூதுணர்ந்தோர்
33	21	பரருங்	பாருங்
36	17	குருப்பை	குரும்பை
39	20	கோட்டுர்	கோட்டூர்